# மார்ச் 23இல் சர்வகட்சி மாநாடு

**யோ.தர்மராஜ்**

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது குறித்து கலந்துரையாட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சர்வகட்சி மாநாடு ஒன்றை மார்ச் 23ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

அதன்படி, மார்ச் 23ஆம் திகதி காலை 10 மணிக்கு இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. 02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 475 பிலவ வருடம், மாசி மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை (10.03.2022) ஹிஜ்ரி - 1444, ஷஃபான் - 06, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## பெற்றோரின் தொந்தரவால் சிறுமி பொலிஸில் சரண்



### யாழில் நடந்த துயரம்

**யாழ்.செய்தியாளர்**

வீட்டில் தன்னால் நிம்மதியாக வாழமுடியவில்லை எனக்கூறி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் 02 பக்கம்

# செலவைக் குறைக்க விசேட கட்டுப்பாடுகள்

**அரசு அதிரடி அறிவிப்பு**

**பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை வெளியானது**



Public Administration Circular : 04/2022

My number:IAD/ADS-2/Cabinet Papers/2020
Ministry of Public Services,
Provincial Councils and Local Government
Independence Square
Colombo 07.

08.03.2022

Secretaries of Ministries
Secretaries of State Ministries
Chief Secretaries of Provinces
Heads of Departments/ Government Agents
Heads of Government Corporations and Statutory Boards
Divisional Secretaries/ Heads of Institutions

**Saving Electricity and Fuel**

Reference the Cabinet decision on the above matter, taken at the meeting of the Cabinet of Ministers held on 07.03.2022.

02. Certain importations have to be restricted due to the issue of foreign currency which is the result of the decrease in the revenue of the government and increase in the expenditure for imports in the face of the Covid 19 pandemic, which emerged two years ago and is still spreading.

03. The foreign exchange crisis has had an adverse effect on fuel importation in a situation where the total fuel requirement of the country is satisfied from importation. Therefore, saving fuel and the electricity generated by imported fuel is the responsibility of all parties.

04. Accordingly, it is hereby informed to follow the below-mentioned instructions at all public institutions with regard to consumption of electricity and fuel.

4.1 Saving electricity

(a) Conservation of energy

i. Minimizing the usage of elevators and using stairways as far as possible.

ii. Operating the elevator with maximum number of persons following health guidelines depending on the capacity of the elevator instead of using it for one person.

iii. Using an electric fan instead of air conditioners for the whole place when only one or two persons are on duty.

**யோ.தர்மராஜ்**

நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை கட்டுப்படுத்துமாறு பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டுக்குத் தேவையான முழு எரிபொருளும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. அந்நிய செலாவணி கையிருப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, எரிபொருள் இறக்குமதிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், எரிபொருளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கட்டுப்பாடுகளுடன் பாவிப்பது அனைவரின் பொறுப்பாகும்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் எரிபொருள் மற்றும் மின்சாரத்தைக் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்தவேண்டும்.

அதன்படி, மின் உயர்த்திகளின் பாவனையைக் குறைத்து படிகளை பயன்படுத்துவதோடு, மின் உயர்த்தியில் ஒருவர் பயணிப்பதை விட, சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய கூடிய எண்ணிக்கையிலான நபர்கள் ஒரே தடவையில் பயணிக்கவேண்டும். 02 பக்கம்,

# அடுத்த வாரம் நிலைமை வழமைக்கு!

## எரிபொருள் நெருக்கடி குறித்து அமைச்சர் லொக்குகே நம்பிக்கை

**யோ.தர்மராஜ்**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் 20 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எரிபொருள், மின்சாரம் ஆகிய சேவைகளில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலைமை எதிர்வரும் வாரம் முதல் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்ப்பதாக வலு சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின்... » 02 பக்கம்

## ஆளுங்கட்சி கூட்டத்தில் விமல், வாசு, உதய இல்லை

**யோ.தர்மராஜ்**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஆளுங்கட்சி குழுக் கூட்டத்தை விமல் வீரவங்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் புறக்கணித்துள்ளதாக ஆளுந்தரப்பு எம்.பி. ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தலைமையில் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது. » 02 பக்கம்



# வாசுதேவ தானாகவே விலகுவாரென நினைத்தோம்!

## விமல், கம்மன்பில நீக்கம் குறித்து பெசில்

**யோ.தர்மராஜ்**

அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை பதவிநீக்கம் செய்தபின்னர், அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தானாகவே பதவி விலகி விடுவார் என்ற எதிர்பார்ப்பிலேயே அவரை பதவியிலிருந்து நீக்கவில்லை... » 02 பக்கம்

**கமெண்ட் கந்தர்..**



இப்போவெல்லாம் சிலிண்டர் வெடிக்கிறதில்ல...ஏனெண்டா வெடிக்கிறதுக்கு சிலிண்டரே இல்ல பாருங்கோ...



## பாலமுனையில் புத்தர் சிலை அமைக்கும் முயற்சி தோல்வி

11 பக்கம்

# மருந்து விநியோகம் நாடு முழுவதும் இடைநிறுத்தம்!

**டொலர் நெருக்கடியால் இறக்குமதியாளர்கள் தீர்மானம்**

**நமது விசேட செய்தியாளர்**

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 230 ரூபாவாக இலங்கை மத்திய வங்கி கணித்ததைத் தொடர்ந்து, இறக்குமதியாளர்கள் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகிப்பதை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளனர். 02 பக்கம்

## மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்; நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்போம்

**இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கூறுகிறார்**

**நா. தினுஷா**

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி காரணமாக தனியார் மருந்து இறக்குமதி நிறுவனங்கள் மருந்துகளை சந்தைக்கு விநியோகிக்காமல் களஞ்சியங்களில் தடுத்துவைத்தால், அதனூடாக செயற்கையான மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஔடத உற்பத்திகள், வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

டொலரின் பெறுமதிக்கு ஏற்றாற்போல மருந்துகளின் நிர்ணய விலையை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஹோமாகம பிரதேசத்தில் நேற்று அரச ஒசுசல மருந்தகத்தை திறந்துவைத்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 02 பக்கம்

### உஷ்



விமல் வீரவங்ச நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றவிருந்தார். ஆனால், சுகயீனம் காரணமாக அவரால் உரையாற்ற முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் நடந்த அரசியல் கூட்டமொன்றுக்கு விமல் சென்றுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்ற ஆளுங்கட்சி தரப்பில் விமலுக்கு நேரம் முறையாக ஒதுக்கப்படாமையே இதற்கான காரணமென சொல்லப்படுகிறது. ஆளுங்கட்சி தரப்பிலிருந்து பேச இடம் கிடைக்காவிட்டால் எதிர்த்தரப்பு நேரத்தை பெற்று விமல் உரையாற்றலாமென சொல்லப்பட்டது.

## பேரறிவாளனுக்கு பிணை; உயர் நீதிமன்றம் உத்தரவு

02பக்கம்

## ராஜபக்ஷக்கள் ட்ரில்லியன் கணக்கில் பணம் கொள்ளை

**அதனாலேயே நாடு வங்குரோத்தடைந்ததாக சந்திரிகா குற்றச்சாட்டு**

**யோ.தர்மராஜ்**



ஆட்சி அதிகாரத்தின் கீழ் சர்வதேசங்களிடமிருந்து கடன்களை பெற்ற ராஜபக்ஷக்கள் ட்ரில்லியன் கணக்கில் வெளிநாட்டு முதலீடுகளை கொள்ளையடித்தமையினாலேயே இன்று நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து அடைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அத்தோடு, அரசாங்கத்திடம் தெளிவான அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் இல்லையெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,... 02 பக்கம்

## தங்கத்தின் விலை யாழில் அதிகரிப்பு

**யாழ். செய்தியாளர்**

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை மூவாயிரம் ரூபாவினால் உயர்வடைந்து, ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபாவாக உச்சத்தைத் தொட்டுள்ளது.

ரஷ்யா – உக்ரைன் மீது போர் தொடுத்துள்ளமையால் சர்வதேச பங்குச்சந்தை மீதான முதலீடு குறைவடைந்து, தங்கம் மீதான முதலீடு அதிகரித்துள்ளது.

இதனால் உலக சந்தையில் தங்கத்தின் விலை பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

02 பக்கம்

## அத்தியாவசியமற்ற 367 பொருட்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு

**வர்த்தமானி வெளியீடு**



**யோ.தர்மராஜ்**

நாட்டில் 367 அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதித்து, வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## பதுளை மாணவி கொலை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

06 பக்கம்

## அத்தியாவசியமற்ற...

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் (08) நள்ளிரவு முதல் அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதித்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி அப்பிள், திராட்சை, தோடம்பழம் மற்றும் அன்னாசி உள்ளிட்ட பழவகைகள், சீஸ், பட்டர், யோகட் உள்ளிட்ட பால் உற்பத்திப் பொருட்கள், நீர், வெளிநாட்டு மதுபானம் மற்றும் பியர் உள்ளிட்ட பொருட்கள், பழச்சாறு, சொக்கலட், அழகுசாதனப் பொருட்கள், நூடில்ஸ், மீன்வகைகள், முட்டை, ஐஸ்கிரீம் உள்ளிட்டவைக்கு இவ்வாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள் வீடியோ கேம்ஸ், இசைக் கருவிகள், மின்சார உபகரணங்கள் உள்ளிட்டவைக்கும் இவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், அனுமதி அடிப்படையில் இந்தப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும்போது, ஒவ்வொரு இறக்குமதியாளரும் தங்கள் இறக்குமதிகள் தொடர்பாக நிதி அமைச்சிடம் கோரிக்கைவிடுக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதை பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக குறுகிய காலத்துக்கு இறக்குமதிகளில் கட்டுப்பாடுகளை விதிக்க தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் பரிந்துரைக்கமைய இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு மூன்று வகையான கட்டுப்பாட்டுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்கள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்தான அறிவித்தலில் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளார். முதலாவது நடைமுறைக்கமைய, சில தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு வரி அறவிடப்படும்.

இரண்டாவது நடைமுறைக்கமைய, சில தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது நடைமுறைக்கமைய, சில தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு வரி விதிக்கவும் அனுமதி பெறுவதைக் கட்டாயமாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்த 367 பொருட்களை இறக்குமதி செய்ய நேரடியாகவும் முறைமுகமாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## பெற்றோரின்....

தஞ்சம் அடைந்த மாணவியை, பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மதுபோதையில் வரும் தந்தை, தாயுடன் சண்டை பிடிப்பதாகவும் இருவராலும் தன்னால் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை என தெரிவித்து குறித்த மனைவி பாடசாலை சீருடையுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்துள்ளார்.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த தரம் 07இல் கல்வி கற்கும் 12 வயதுடைய குறித்த மாணவி, தினமும் தந்தை மதுபோதையில் வந்து தாயாருடன் சண்டை பிடிப்பதாகவும் இதனால் தன்னுடன் ஒவ்வொருநாளும் வாக்குவாதத்திலும் சண்டையிலும் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த மாணவி வீட்டின் மூத்த பிள்ளை எனவும் இவரை விட இரண்டு பிள்ளைகள் இருப்பதாகவும் பொலிஸார் மாணவி தொடர்பில் மேற்கொண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை தம்மிடம் தஞ்சமடைந்த மாணவியை பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## செலவைக் குறைக்க...

அலுவலகங்களில் அதிகாரிகள் இல்லாத சமயத்தில் அனைத்து மின் உபகரணங்களையும் செயலிழக்கச் செய்தல் மற்றும் அதிகாரிகள் பணி நிறைவுற்றுச் செல்லும் போது மின் உபகரணங்களை செயலிழக்கச் செய்வதிலும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஒருவர் அல்லது இருவர் மட்டும் பணியாற்றும் மண்டபத்தில் குளிரூட்டியை பயன்படுத்துவதற்கு பதிலாக மின்விசிறியை பயன்படுத்தல் வேண்டும்.

அலுவலகங்களில் முடிந்தவரை சூரிய மின்சக்தி பயன்பாடு குறித்து அதிக அவதானம் செலுத்த வேண்டும்.

தேவையற்ற மின் விளக்குகளை அணைப்பதுடன், மின் விளக்குகளை தனித்தனியாக அணைப்பதற்கு ஆழி (சுவிச்) பொருத்தப்பட வேண்டும். முடிந்தவரை இயற்கை ஒளியை பெறும் வகையில் செயற்பட வேண்டும்.

நிறுவனங்களில் முடிந்தவரை லாம்புகளை பயன்படுத்துவதுடன் சாதாரண மின் விளக்குகளை அணைக்கும் வகையில் செயற்பட வேண்டும் என்பதோடு, இரவு நேரங்களில் தேவையான இடங்களில் மாத்திரம் மின் விளக்குகளை பயன்படுத்துமாறு காவலாளி அல்லது உரிய பாவனையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் கீழுள்ள வீதி விளக்குகளை தேவையற்ற நேரத்தில் அணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதி பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான இடங்களிலுள்ள வீதிகளை தவிர ஏனைய அனைத்து வீதிகளிலும் தற்காலிக செயற்பாடாக வீதி விளக்குகளை அணைத்தல் வேண்டும்.

பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை குளிரூட்டிகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

காலை நேரங்களில் வெளிப்புற வெப்ப நிலை குறைவாக இருப்பதால், யன்னல்களை திறந்து, இயற்கை காற்றோட்டத்தை பயன்படுத்தி அலுவலகக் கடமைகளை ஆரம்பிப்பதுடன், ஒரு மணித்தியாலத்துக்கு பின்னர் குளிரூட்டிகளை இயங்கச் செய்தல் வேண்டும்.

அலுவலகங்களில் முடிந்தவரை குளிரூட்டிகளின் பயன்பாட்டை குறைத்து மின் விசிறிகளை பயன்படுத்தல் வேண்டும்.

அலுவலக நேரம் முடிந்தவுடன் அலுவலகங்களை மூடி வைப்பதுடன், வார நாட்களில் அத்தியாவசியமான மற்றும் பிற்போட முடியாத சந்தர்ப்பங்களை தவிர ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அலுவலகங்கள் மூடி வைக்கப்பட வேண்டும்.

அரச நிறுவனமொன்றில் நாளொன்றுக்கு 75 ஆயிரம் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்ற நிலையில், ஒரு வாகனத்தில் ஒரு லீற்றர் எரிபொருள் சேமிக்கப்பட்டால் ஒரு நாளைக்கு 75ஆயிரம் லீற்றர் சேமிக்க முடியும் என்பதால், உரிய அதிகாரிகள் மற்றும் சாரதிகளும் பொருத்தமான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் வேண்டும்.

அமைச்சர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு வழங்கும் எரிபொருளுக்கு மேலதிகமாக வழங்கும் எரிபொருளை தற்காலிகமாக நிறுத்தல் வேண்டும்.

கொழும்புக்கு வெளியிலுள்ள உத்தியோகத்தர்களை தலைமை அலுவலகத்துக்கு அழைப்பதை குறைப்பதுடன், மாவட்ட மற்றும் மாகாணங்களிலுமுள்ள அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்கள் அழைக்கப்படுவதை குறைக்க வேண்டும். தேவையான நாட்களுக்கு அழைக்கும்போது, ஒரே நாளில் ஏனைய கூட்டங்களுக்கு பயன்படுத்தல் வேண்டும்.

சந்திப்புகள் மற்றும் கூட்டங்களை சூம் தொழில்நுட்பத்தில் முன்னெடுத்தல் வேண்டும்.

வெளிப்புறங்களிலிருந்து உத்தியோகத்தர்கள் சேவைக்கு வரும்போது, ஒரு வாகனத்தில் ஒருவர் வருவதை விட முடிந்தவரை குழுவாக அழைத்துவருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எல்லா சந்தர்ப்பத்திலும் எரிபொருள் வினைத்திறன் கொண்ட வாகனங்களை போக்குவரத்துக்கு பயன்படுத்தல் வேண்டும்.

அஞ்சல் விநியோகத்துக்கு கார் மற்றும் வேன் பயன்படுத்துவதற்கு பதிலாக மோட்டார் சைக்கிள் மற்றும் மிதிவண்டிகளை பயன்படுத்தல் வேண்டும்.

சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காக அத்துறைகளுக்கு தேவையான எரிபொருளை அப்பகுதிகளிலுள்ள எரிபொருள் நிலையம் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

நெல் அறுவடை மற்றும் மீன்பிடிக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு உரிய அமைச்சுடன் இணைந்து பொருத்தமான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

அரச நிறுவனங்களில் மின் கட்டணம், எரிபொருள் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் தொலைபேசி கட்டணம் கடந்த மாதத்தைவிட எந்தளவு குறைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதற்கு விசேட முறைமையொன்றையும் தயாரிக்க வேண்டும்.

இந்த சுற்றறிக்கை அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறியின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருந்துக்கு தட்டுப்பாடு...

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மருந்து இறக்குமதிக்காக இந்தியாவிலிருந்தும் கடனுதவி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மருந்து தட்டுப்பாட்டை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்தனை நாட்களில் மருந்து தட்டுப்பாடு ஏற்படலாம் என எதிர்வுகூற முடியும். அவ்வாறான நிலைமை ஏற்படாமலிருப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்து வருகின்றோம். எனவே, மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. நாட்டுக்கு தேவையானளவு மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தனியார் மருந்து இறக்குமதி நிறுவனங்கள், டொலர் நெருக்கடியின் காரணமாக மருந்து வகைகளை இறக்குமதி செய்ய தயக்கம் காட்டிவருகின்றன. இதுதொடர்பில், அவர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதன் காரணமாக, தனியார் மருந்து இறக்குமதி நிறுவனங்கள் மீண்டும் மருந்துகளை இறக்குமதி செய்ய இணக்கம் தெரிவித்துள்ளன. அதனால், பிரச்சினை ஏற்படாது என்று நம்புகிறோம்.

உலக சந்தையில் பெரசிட்டமோல் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களின் விலை கடந்த சில தினங்களில் அதிகரித்திருந்தது. அதன் காரணமாகவே, பெரசிட்டமோலுக்கு இருந்த நிர்ணய விலையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (08) முதல் டொலரில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, அதனை ஈடு செய்யும் வகையில் மீண்டும் மருந்துகளின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி ஏற்படும்.

இதுதொடர்பில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அவ்வாறு, இல்லாவிட்டால் மேற்குறிப்பிட்டதுபோன்று, மருந்துகளின் விலை அதிகரிக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் தனியார் மருந்து இறக்குமதி நிறுவனங்கள் மருந்துகளை சந்தைக்கு விநியோகிக்காமல் களஞ்சியங்களில் தடுத்து வைக்க முடியும். அதனூடாக செயற்கையான மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறாதொரு நிலைமை உருவாக இடமளிக்கக் கூடாது.

டொலரின் பெறுமதிக்கு ஏற்றாற்போன்று மருந்துகளின் நிர்ணய விலையை முன்னெடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பெரசிட்டமோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அனைத்து மருந்து விற்பனை நிலையங்களிலும் பெரசிட்டமோல் இல்லை என்று கூற முடியாது. சில தனியார் மருந்து நிறுவனங்கள் ஒரு சில வர்த்தக பெயர்கள் கொண்ட மருந்து வகைகளின் விநியோகத்தை நிறுத்தியுள்ளன. குறித்த வர்த்தகப் பெயர்களை கொண்ட மருந்துகளை கொள்வனவு செய்தவர்களுக்கே இந்த சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. மாறாக, மருந்து தட்டுப்பாடு என்ற பிரச்சினை ஏற்படவில்லை. ஆகவே, மருந்தகங்களில் பெரசிட்டமோல் விற்பனையாகிறது. ஆனால், பெரசிட்டமோலை விற்பனை செய்யும் ஒருசில வர்த்தக பெயர்களுக்கே சந்தைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறித்த ஒரு வர்த்தகப் பெயரை மாத்திரம் பயன்படுத்தாது, வேறு பெயர்கள் அல்லது பெரசிட்டமோல் என்ற பெயரை பயன்படுத்தியே குறித்த மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## ராஜபக்ஷக்கள் ட்ரில்லியன்...

நாட்டில் அதிக ஜனநாயகம் கொண்ட தலைவராக சிறிமாவோ பண்டாரநாயக்க காணப்பட்டார். அவருடைய ஆட்சியில் ஏனைய கட்சித் தலைவர்கள் மற்றும் 1994ஆம் ஆண்டு வரை இருந்த அரசத் தலைவர்களுடன் ஒப்பிடும் போது, சவால் மிக்க காலப்பகுதியிலும் கூட தன்னுடைய ஜனநாயக உருவத்தையோ அல்லது ஆட்சியையோ மாற்றவில்லை. ஜனநாயகத்துடன் அடுத்தவரின் சுதந்திரத்தை மதித்து ஆட்சி செய்த ஒருவராவார்.

அத்தோடு, தங்களிடமிருந்த இடத்திலும் 03 ஏக்கர் காணியை அரசுக்கு வழங்கி மக்களின் அபிவிருத்திக்காகவும் காணியில்லாதவர்களுக்கு இடம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டங்களையும் கொண்டுவந்தார். ஆனால், தற்போதைய நிலைமையை பார்க்கும்போது பொருளாதாரம் வங்குரோத்தடைந்துள்ளதை காண முடிகின்றது.

2005 தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை இருந்த அரசாங்கத்தின் பிரதானி ட்ரில்லியன் கணக்கில் கொள்ளையடித்தமையினாலேயே இன்று இந்த நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. கொள்ளையடிப்பதற்காக கடன்களை பெற்றுக்கொண்டனர். அவர்கள் கொள்ளையடித்ததை பார்த்த சர்வதேசங்கள் எங்களுக்கான நிதியுதவிகளையும் நிறுத்தின.

எங்களைப் போன்ற நாடுகள் சர்வதேச தனியார் வங்கிகளிடம் கடன் பெற்றுக்கொள்ளவதில்லை. மாறாக, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் நட்பு நாடுகளிடமே கடன்களை பெற்றுக்கொள்வோம். அவ்வாறு கடன்களை பெற்றாலும் ஒரு வீத வட்டியிலேயே பெற்றுக்கொள்வோம். என்னுடைய ஆட்சியில் 0.5 வீதத்துக்கு கூடுதலாக கடன்களை பெற்றதில்லை. ஆனால், இவர்கள் 09 வீத வட்டிக்கு கடன்களை பெற்றுக்கொண்டனர். அதையும் அவர்களே கொள்ளையடித்தனர்.

மேலும், மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற தேவையற்ற வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தனர். ஆனால், என்னுடைய ஆட்சியில் நுரைச்சோலை போன்ற அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்தேன். எனவே, அவர்கள் பெற்ற கடன்கள் இன்று சுமையாக மாறி நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இதனால், எரிபொருளின்றி இருட்டிலும் உண்ண உணவின்றியும் தவிக்கின்றோம்.

மறைந்த பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை. அவரின் பின்னர் பொறுப்பேற்ற நானும் என்னுடைய ஆட்சியில் இவ்வாறானதொரு நிலைமைக்கு இடமளிக்கவில்லை. இதனால் யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்களை இறக்குமதி செய்திருந்தேன். இதிலேயே மஹிந்த ராஜபக்ஷவினால் யுத்தத்தை நிறைவு செய்ய முடிந்தது.

என்னுடைய ஆட்சியில் மோசடிகளையும் ஊழலையும் கட்டுப்படுத்தியதனாலேயே யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்களைக் கொண்டுவர முடிந்ததுடன், பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடிந்தது. வறுமையான நாடுகளிலிருந்து போஷாக்கான நாடுகளுக்கு இலங்கையை கொண்டுவர முடிந்தது. சிறந்த பொருளாதாரக் கொள்கையினாலேயே நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடிந்தது. ஆனால், இந்த அரசாங்கத்திடம் தெளிவான அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் இல்லை என்பதே உண்மை – என்றார்.



ஒருகொடவத்தையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக பெருந்திரளான மக்கள் நீண்ட வரிசையில் நேற்று (09) காத்திருந்தனர். (படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

## பேரறிவாளனுக்கு பிணை...

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பேரறிவாளனுக்கு பிணை வழங்கக்கூடாது என்று இந்திய மத்திய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், பிணை வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவரை விடுதலை செய்யக்கோரி பேரறிவாளன் தரப்பில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது, பிணை வழங்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, உயர்நீதிமன்றம் பேரறிவாளனுக்கு பிணை வழங்கியுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று கடந்த 30 ஆண்டுகளாக சிறையில் இருந்து வரும் பேரறிவாளன், தற்போது சிறை விடுப்பில் இருந்து வருகிறார். அவருக்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு பிணை வழங்கி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

## அடுத்த வாரம்...

போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விநியோகக் கட்டமைப்பிலும், தேசிய மின்விநியோக கட்டமைப்பிலும் பாரிய நெருக்கடி நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. டொலர் நெருக்கடி காரணமாக எரிபொருள் கொள்வனவுக்கு பாதிப்பு ஏற்பட்டதால் எரிபொருள் விநியோகத்திலும் தற்காலிகமாக நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போது 20ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் கையிருப்பில் உள்ளது. 32 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் நேற்றுமுன்தினம் (08) தரையிறக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, எதிர்வரும் நாட்களில் மேலும் இரு எண்ணெய் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

நாடுதழுவிய ரீதியில் உள்ள சகல எரிபொருள் விநியோக நிலையங்களுக்கும் தேவையான எரிபொருளும், இலங்கை மின்சார சபைக்கு தேவையான எரிபொருளும் முழுமையாக விநியோகிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, மின்சார சபையினால், 32 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளை நேரடியாக கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், மின்வெட்டை கட்டுப்படுத்துவதற்கு முடியும் என நினைக்கின்றோம்.

மேலும், எரிபொருள், மின்சாரம் ஆகிய சேவைகளில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலைமை எதிர்வரும் வாரம் முதல் வழமைக்கு திரும்பும். அத்தோடு, 15ஆம் திகதிக்கு பின்னர் இந்தியாவின் கடனுதவித் திட்டத்தின் ஊடாக டீசல், பெற்றோல் மற்றும் விமான எரிபொருள் அடங்கிய கப்பலும் வந்தடையும்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலைமையிலும் எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து இதுவரையில் அவதானம் செலுத்தப்படவில்லை. எரிபொருள் விலை சூத்திரம் குறித்து அவதானம் செலுத்தப்படவில்லை.

நெருக்கடியான நிலைமையினை கருத்திற்கொண்டு நாட்டு மக்கள் எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் பாவனையை இயலுமான அளவு குறைத்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

## மார்ச் 23இல்...

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சர்வகட்சி மாநாடு ஒன்றை நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது.

இதனையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் (08) இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் சர்வகட்சி மாநாடு ஒன்றுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே, இந்த சர்வகட்சி மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜனாதிபதி செயலகத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த சர்வகட்சிக்கு மாநாட்டுக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிந்தது.

## ஆளுங்கட்சி கூட்டத்தில்...

இதன்போது, பதவி நீக்கப்பட்ட விமல் வீரவங்சவுடன் தேசிய சுதந்திர முன்னணியின் 06 உறுப்பினர்கள் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பதுடன், உதய கம்மன்பிலவும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.

ஆனால், ஆளுந்தரப்பு குழுக்கூட்டம் இடம்பெற்றபோது, தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபை வளாகத்தில் கலந்துரையாடிக் கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நால்வர் மாத்திரமே குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பதவி நீக்கப்படாவிட்டாலும் அமைச்சின் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ள வாசுதேவ நாணயக்காரவும் இதில் கலந்துகொள்ளவில்லை என்றார்.

மேலும், அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு அரசாங்கத்தை விமர்சிப்பதால் விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் பதவி நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் இருந்தனர்.

இந்த நிலையில், கடந்த வாரம் இவர்கள் பதவி நீக்கப்பட்டதை ஆளுந்தரப்பு குழுக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் வரவேற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

## தங்கத்தின் விலை...

அத்துடன், இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பும் தங்கம் மீதான விலையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று (09) புதன்கிழமை 22 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 750 ரூபாவாக அதிகரித்துள்ளது. நேற்று ஒரு இலட்சத்து 21 ஆயிரம் ரூபாவாக காணப்பட்டது.

**தூய தங்கத்தின் விலை:**

இதேவேளை, 24 கரட் தூய தங்கம் நேற்று பவுண் ஒன்று ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டது.

## வாசுதேவ தானாகவே...

என நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் பின்வரிசை உறுப்பினர்களுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கும் அரசாங்கத்தின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் (08) நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

டொலர் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ள நெருக்கடியில் இருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டுவருவதால், இது தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை என நிதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை பதவி நீக்கம் செய்தபின்னர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தானாகவே பதவி விலகிவிடுவார் என்ற எதிர்பார்ப்பிலேயே அவரை பதவியில் இருந்து நீக்கவில்லை என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை விருப்பத்துடன் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் மற்றும் ஆட்சியில் சில சில முடிவுகளை எடுக்க வேண்டும். இந்த நிலையில் அந்த அமைச்சர்களுடன் இருந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை ஏன் நீக்கவில்லை என கேட்கின்றனர்.

ஆனால், மூன்றாவது நபர் தானாகவே விலகிவிடுவார் என்றே நினைத்தோம். இவர்கள் பதவி விலகியதால் அரசாங்கத்தை தக்கவைப்பதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை என நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் எம்மை விமர்சிப்பவர்கள், எதிரிகள் இல்லை. பொறுமையுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மருந்து விநியோகம்...

இதன் காரணமாக நாடு முழுவதும் சுமார் நான்காயிரம் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளது.

டொலரின் பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளதால் மருந்துகளின் விலைகளை அதிகரிக்க வேண்டுமென ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையிடம் மருந்து இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன் சுகாதார அமைச்சரிடம் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் ஒன்றையும் அவர்கள் கோரியிருந்தனர்.

இந்நிலையில், நாட்டில் 75 வகை மருந்துவகைகளுக்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்த நிர்ணய விலையில் மாற்றம் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இறக்குமதியாளர்கள் மருந்து விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக மருந்துகளின் விலை அதிகரிக்கலாம் என மருந்தக உரிமையாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்

**10.03.2022 வியாழக்கிழமை மாசி 26**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: ரோகிணி**
காலை 11.30 வரை
**மிருகசீரிடம்**
காலை11.30 -11.03.2022
பிற்பகல் 2.36 வரை
**யோகம்: பிரீதி**
அ.கா 1.17 - 11.03.2022
அதிகாலை 2.14 வரை

**திதி: பூர்வ பட்ச அஷ்டமி**
அ.கா 2.56 - 11.03.2022
அதிகாலை 5.34 வரை
**முற்கரணம்: பத்திரை**
அ.கா 2.56 - மாலை 4.14
**பிற்கரணம்: பவம்**
மாலை 4.14 - 11.03.2022
அதிகாலை 5.34 வரை

**சுப நேரங்கள்**
காலை 11.10 - பி.ப 12.21
**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
பிற்பகல் 1.51 - 3.22

**குளிகை காலம்**
காலை 9.20 - 10.51
**எமகண்ட காலம்**
**காலை 6.20 - 7.50**
**துர் முகூர்த்தம்**
காலை 10.20 - 11.09
மாலை 3.10 - 3.58

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் நிதானம் தேவைப்படலாம். வணிகத்தில் சில சிக்கல்கள் ஏற்படலாம். திருமணத்துக்கு புறம்பான விடயங்களில் ஒதுங்கி இருப்பது நன்மை. பேசும் சொற்களில் அவதானமும், வாக்குவாதமும் தவிர்ப்பது நல்லது. இறைவணக்கம் தேவை.

**ரிஷபம்:** பணியிடங்களில் கடின உழைப்புக்கான பலன் கிடைக்கும் சாதகமான நாளாக அமையலாம். கூட்டுத் தொழிலில் கவனம் தேவைப்படலாம். புதிய நிதி முதலீடுகள் செய்யப்படலாம். பணிகளில் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** வாழ்க்கைத்துணையுடன் உறவில் விட்டுக்கொடுப்பு நல்லது. சில தேவையற்ற நட்பால் பிரச்சினைகள் உருவாகலாம். அரசாங்கம் சம்பந்தப்பட்ட வேலைகள் தாமதமடையலாம். கொடுத்த கடன் திரும்பப் பெறும் நிலை உண்டாகலாம்.

**கடகம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் பிரச்சினைகள் நீங்கலாம். கட்டுமானம் சம்பந்தப்பட்ட வேலைகளில் நல்ல நிலை ஏற்படலாம். தடைப்பட்ட வேலைகள் நிறைவேற தொடங்கலாம். சகோதரர்களின் ஆதரவு மேம்படும்.

**சிம்மம்:** நண்பர்களின் ஆதரவால் நல்ல பலன் கிடைக்கலாம். வீடு/காணி/ சொத்து வாங்கும் திட்டம் உருவாகலாம். பரம்பரை சொத்து விடயங்களில் புதிய முடிவுகள் எடுக்கப்படலாம். வணிகத்தில் மேலதிக பொறுப்பு உண்டாகலாம். வாழ்க்கைத்துணையுடன் நல்லிணக்கம் நிலவும்.

**கன்னி:** புதிய பணிக்கு செல்லும் எண்ணங்கள் உருவாகலாம். காதல் விடயங்களில் சிறிய கவனம் தேவைப்படலாம். வெளிநாட்டுப் பணிகளில் இருப்பவர்களுக்கு மதிப்பு மேம்படும். பணிகளில் கவனம் தேவைப்படலாம். வணிகத்தில் சில தடைப்பட்ட செயல்கள் நிறைவேறலாம்.

**துலாம்:** இன்று கடன் கொடுப்பதை அல்லது வாங்குவதை தவிர்ப்பது நன்மை. உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். பிறர் விடயங்களில் தேவையற்ற தலையீடு தவிர்ப்பதும் நன்மை. குடும்ப பொறுப்புகளில் அலட்சியம் வேண்டாம். பயணங்களில் செலவுகள் ஏற்படலாம்.
**சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம்**
**பாதம் 1/2/3க்கு அ.கா 4.44 - 11.03.2022**
**அதிகாலை 1.03 வரை**

**விருச்சிகம்:** திருமணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் சுபங்கள் ஏற்படலாம். அரசியலில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். காதல் முன்மொழிதல் உண்டாகலாம். நண்பர்களுடனும் மகிழ்ச்சியான நாளாக அமையலாம். சுப செய்திகளும் கிடைக்கப் பெறலாம்.
**சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம் பாதம் 4க்கு 11.03.2022**
**அ.கா 1.03- காலை 7.49 வரை**

**தனுசு:** வேலைத்தள உள்ளக அரசியலில் ஒதுங்கி இருப்பது நன்மை. விடா முயற்சியால் சாதகமான நிலை தோன்றலாம். உடல்நலம் சீராகும். தன்னம்பிக்கையால் பணித்திறன் மேம்படும்.

**மகரம்:** பொறியியல் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு, எதிர்கால பணிக்கான வாய்ப்பு உருவாகலாம். விரும்பிய வேலைகள் சிறப்புற நிறைவேறலாம். பணிகளில் மேலதிகாரிகளின் அதிருப்தி உண்டாகலாம். நிதி பரிவர்த்தனையில் கவனம் தேவைப்படலாம்.

**கும்பம்:** நிதி தொடர்பான உறுதியற்ற நிலைமையால் மனக் கவலை தோன்றலாம். மின் உபகரணங்களை பயன்படுத்துவதில் கவனம் தேவைப்படலாம். பணிகளில் சில தடைகளும் உண்டாகலாம். எதிர்மறை எண்ணங்களை நீக்குவதும் நல்லது. இறைவணக்கம் தேவை.

**மீனம்:** காணி/வீடு/சொத்து சம்பந்தப்பட்ட வர்த்தகத்தில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய திட்டங்கள் உருவாகலாம். வணிகத்தில் புதிய விற்பனை ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல நிலை தோன்றலாம். வருவாய்க்கான புதிய நல்ல நிலை உருவாகலாம்.

# ஐக்கிய மக்கள் சக்திக்கும் மத்தியவங்கி ஆளுநருக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நேற்று (09) மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கைக்குழு நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும், நாடு தற்போது சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியை ஓரளவேனும் தீர்த்துக்கொள்வதற்கு மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள தயார் நிலையில் இருப்பது போன்று தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கைக் குழு உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன, கபீர் ஹாசிம் மற்றும் ஹர்ஷ டி சில்வா உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ளனர்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாடு தொடர்பில் எங்களுக்கு பல்வேறு பொறுப்புகள் இருப்பதால், பொருளாதாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு யோசனைகளை முன்வைத்துள்ளோம். இந்த யோசனைகள் நாட்டு மக்களுக்காகவே முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போதைய சூழ்நிலையில் அரசியல் கட்சி, நிற வேறுபாடின்றி எங்களின் யோசனைகளை அரசாங்கத் தரப்பு நிறைவேற்றுமாக இருந்தால், இந்த நெருக்கடி நிலையை சீர்செய்வதற்கு வழிவகுக்கக்கூடியதாக இருக்குமென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நாம் தற்போது சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடி தற்காலிகப் பிரச்சினையாக மத்தியவங்கி கருதினாலும், நாங்கள் அவ்வாறு எண்ணவில்லை. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி வங்குரோத்து நிலையாக மாறக்கூடிய நிலை காணப்படுவதாகவும், அதனால், கடன்களின் நிலைத்தன்மையை பரிசீலனை செய்து அதனை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் மத்திய வங்கிக்கு வலியுறுத்தியுள்ளோம்.

எது எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட மத்திய வங்கி தயாராக இருப்பதுபோன்று இந்தக் கலந்துரையாடலில் தெரியவில்லை. அவசர கடன் தொடர்பான நிலைபேறான மறுசீரமைப்பு மற்றும் திட்டமொன்றை வகுத்து கடன் மறுசீரமைப்பின் முக்கியத்துவம் தொடர்பில் இதன்போது அதிக கவனம் செலுத்தியிருந்தோம். அதேபோன்று, உணவு, பணவீக்கம் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகவும், அதனை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதால் உடனடியாக நிலைமையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# அறிவின் கேந்திரமாக நாட்டை மாற்றுவதே எமது கனவு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



நவீன தொழில்நுட்பத்தை வென்ற, அறிவினால் நிறைவான நாடாக இலங்கையை மாற்றுவதே எனது ஒரே நோக்கம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கெஸ்பேவ தர்மசேன ஆட்டிகல மகளிர் கல்லூரிக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (09) இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தற்போது நாடு மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அதனூடாக நாட்டை கட்டியெழுப்பும் சவாலும் இருப்பதாகவும் அதற்காக நிலையான வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி மதுஷா திஸாநாயக்க மற்றும் ஐக்கிய மகளிர் சக்தியின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நாளை

(யாழ். நிருபர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழாவுக்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய இரு தினங்களில் இடம்பெறவுள்ளது.

எனினும், தற்போது நாட்டில் உள்ள கொரோனா இடர்நிலை காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் பங்கேற்புடன் பெரு விழாவினை சிறப்பாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த பெருவிழா சிறப்பாக இடம்பெறுவதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# திருகோணமலை - மூதூர் பிரதான வீதியில் விபத்து



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை - மூதூர் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று (09) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது, மூதூர் பிரதேசத்தில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தின் முன் பக்க சில்லு பகுதி உடைந்ததால் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் ரிப்பர் வாகன சாரதி பலத்த காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யானை - மனித மோதலை தடுக்க அநுராதபுரம் மாவட்டத்தில் 482 கி.மீ. நீளமான மின்வேலி



(அநுராதபுரம் செய்தியாளர்)

யானை மனித மோதலை தடுக்கும் நோக்கில் அநுராதபுர மாவட்டத்தில் 482 கிலோமீற்றர் நீளமான மின்வேலியை துரித கதியில் அமைப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதெடார்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யானை - மனித மோதல் காரணமாக அநுராதபுர மாவட்ட மக்கள் பலவருடங்களாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைக்கு இதன் மூலம் தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியும் என நம்புகின்றோம்.

குறித்த மோதலினால் பல மனித உயிர்கள் மட்டுமின்றி யானைகளும் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் அதி கூடுதலான அச்சுறுத்தலுக்குள்ளான பகுதிகளே முதற்கட்டமாக திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் முன்னெடுப்பதற்கு இலங்கை இராணுவத்தின் பொறியல் பிரிவினிரின் பூரண உதவி கிடைக்கவுள்ளதுடன் இலங்கை விமானப்படை மற்றும் கடற்படை சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவிகளும் பங்களிப்பும் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வன ஜீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.






நாவின்ன பிரதேசத்தில் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக மக்கள் நேற்று (09) வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.


## கொட்டாஞ்சேனை கிளை "புதிய இடத்திற்கு"

**பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களே,**

**வாடிக்கையாளர்களினதும் வியாபாரத்தினதும் துரித வளர்ச்சியுடன் நாம் முன்னிலும் பார்க்க சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன், 2022 மார்ச் 10ஆம் திகதி இன்று தொடக்கம் அதிக இடவசதியுடைய புதிய இடத்திற்கு நகர்கின்றோம் என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.**

எமது புதிய முகவரி

**இல.212, ஜோர்ஜ் ஆர்.டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.**

**தங்களின் அனைத்து நிதித்தேவைகளுக்கும் எமது புதிய கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி,**
**முகாமைத்துவம்,**

**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி.**

**கொச்சிக்கடை கிளை - தொலைபேசி : 0112 334 080**

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 10ஆம் திகதி, வியாழக்கிழமை

# தேசிய அரசு - அரசியல் கூட்டணி: வரும் ஆனால் வராது!

கடந்த சில நாட்களாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இரண்டு செய்திகள் பேசுபொருளாக இருக்கின்றன. அதில் முதலாவது, தேசிய அரசு சம்பந்தமானது. இரண்டாவது, அரசியல் கூட்டணி தொடர்பானது. இரண்டையும் பின்வருமாறு நோக்கலாம்.

**முதலாவது செய்தி -** ஏப்ரல் புது வருடத்திற்கு முன்னர் தேசிய அரசாங்கமொன்று உருவாகக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி அங்கம் வகிக்கும் தேசிய அரசாங்கமொன்றே உருவாகவுள்ளது என அந்த அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு அவசியமாகவுள்ள பாரிய சர்வதேச உதவியைப் பெறும் நோக்கத்துடனேயே தேசிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகிப்பார். பெசில் ராஜபக்ஷ தொடர்ந்தும் நிதியமைச்சராக பதவி வகிப்பார் என தெரியவருகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் 15 உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கத்தில் இணைவார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடமளிக்கும் வகையில் பொதுஜன பெரமுனவின் ஐந்து தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலக்கிக்கொள்வதற்கு பெசில் இணங்கியுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**இரண்டாவது செய்தி -** அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள பங்காளிக்கட்சிகள் புதிய கூட்டணியொன்று குறித்து ஆராய்ந்து வருகின்றன. அதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அல்லது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட) கட்சிகளும், அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனவிரக்தியில் காணப்படுகின்றனர். முக்கிய அரச கட்சி தங்களைப் புறக்கணிக்கின்றது எனக் கருதுகின்றனர் என புதிய கூட்டணி குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாங்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக உணர்கிறோம். நாங்கள் புதிய கூட்டணி குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றோம். நிச்சயம் அது இடம்பெறும் என அரச பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய கூட்டணிக்கு யார் தலைமை தாங்குவது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் அனைத்து கட்சித் தலைவர்களும் மாதத்திற்கு ஒரு முறை சந்தித்துக் கலந்துரையாடி முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அமைச்சர்களை கலந்தாலோசிக்காமல் தீர்மானங்களை எடுக்கின்றார். இதன் காரணமாக தங்கள் பதவி பறிபோகலாம் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அரசியல் செய்திகளும் எந்த அடிப்படையில் எழுதப்பட்டன என்பது தெரியவில்லை. ஆனால், இவை இப்போதைய நிலையில் நடக்காத, சாத்தியப்படாத விடயங்களாகவே இருக்கின்றன.

தேசிய அரசு ஒன்றுக்கு பிரதமராக ரணில் நியமிக்கப்படுவதற்கு இப்போதைய பிரதமர் மஹிந்தவின் ஒப்புதல் தேவை. ஆனால், பிரதமர் பதவியை விட்டுக்கொடுக்கும் எண்ணம் மஹிந்தவுக்கு இல்லையென்பதே கொழும்பு அரசியலின் நிலைவரம். மறுபுறம் தேசிய அரசு ஒன்றுக்கு நாடாளுமன்றத்தில் ஒரே எம்.பியாக இருக்கும் ரணிலை சேர்ப்பது அவரது ஆட்சியில் நடந்த பிணைமுறி மோசடியை மூடிமறைப்பதாக அமைந்துவிடுமென ஆளுங்கட்சியின் மூத்த எம்.பிக்கள் அரச உயர்மட்டத்தை எச்சரித்துள்ளதாக சொல்லப்படுகிறது.

ரணிலை ஆளுங்கட்சிக்குள் இணைத்து அவருக்கு அமைச்சுப் பொறுப்பினை வழங்குவது வேறு. தேசிய அரசை ஏற்படுத்தி அவருக்கு பிரதமர் பதவியை கொடுப்பதென்பது வேறு. ஏற்கனவே விமல், கம்மன்பில, வாசுதேவ ஆகியோர் அரசுக்குள் முரண்பட்டு நிற்பதால் கடும் விசனத்தில் இருக்கும் பிரதமர் மஹிந்த, தனது பதவியை விட்டுக்கொடுத்து செல்லும் நிலை இல்லை. விமல், கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட விடயத்தில் கூட தலையிடமுடியாத அளவில் அதிகாரக்குறைப்புச் செய்யப்பட்டிருக்கும் மஹிந்த, எவ்வாறு தேசிய அரசொன்றுக்கு சம்மதித்து தனது பதவியை விட்டுக்கொடுப்பார் ?

மறுபுறம் மைத்ரி அல்லது சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் கூட்டணி உருவாகலாம் என்பதுவும் இப்போதைக்கு நடக்கும் வாய்ப்பில்லை. அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி கட்சி ஆதரவாளர்களை உஷார் நிலையில் வைத்திருக்கும் ஒரு யுக்தியே இந்த அரசியல் கூட்டணி செய்தி.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடந்ததே. அதில் கலந்துகொண்ட மைத்ரிபால சிறிசேன செயலகத்திற்கு வெளியில் செய்தியாளர்களிடம் பேசும்போது ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்தியளித்ததாகக் கூறினாரே. அரசியல் கூட்டணி அமைக்கும் நேர காலம் இல்லை இதுவென்பது மைத்ரிக்கு தெரியாததா? அல்லது மைத்ரி வெளியேற மாட்டாரென நம்புமளவுக்கு ராஜபக்ஷக்கள் அரசியல் அறிவிலிகளா? இல்லை.

தேசிய அரசு அமைப்பது, புதிய அரசியல் கூட்டணி என்பதெல்லாம் வெறும் கற்பனைதான். நாடு இப்போதுள்ள நெருக்கடியில் அவை சாத்தியமற்றவை. கள நிலைவரங்களும், நடப்புகளும் அதனையே சொல்கின்றன.



# குழந்தைகளை வெற்றிகரமானவர்களாக உருவாக்குவது எப்படி?

ஒவ்வொரு பெற்றோருக்கும் தங்கள் குழந்தைகளை வெற்றியாளர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணமிருக்கும். குழந்தைகளுக்கு அவர்கள் சொல்லும் அறிவுரைகள், போதனைகள், கட்டுப்பாடுகள் என அனைத்தும் இதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. வாழ்க்கையில் வெற்றியாளர்களாக தமது குழந்தைகள் மிளிர்வதற்கு அவர்களை எந்தெந்த வகையில் தயார்செய்ய வேண்டும், என்னென்ன கற்றுக்கொடுக்க வேண்டும், எப்படியெல்லாம் நமது குழந்தையை மாற்ற வேண்டுமென எப்போதும் யோசிக்கும் பெற்றோர்கள், அதற்காக சில விடயங்களில் தங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

பெற்றோர்களே இல்லாத குழந்தைகள் கூட வாழ்க்கையில் வெற்றியாளர்களாக மாறியிருக்கின்றார்கள். அதனால், குழந்தைகளின் வெற்றிக்கு பெற்றோர்கள் மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது. ஆனால், ஒரு குழந்தை தோற்றுப்போவதற்கு ஏதோ ஒருவகையில் பெற்றோர்களின் மாற்றிக்கொள்ளாத, பிடிவாதமான அணுகுமுறைகள் காரணமாக இருந்திருக்கின்றன என்பதை ஆராய்ச்சிகள் உறுதியாகச் சொல்கின்றன. அந்த வகையில், வாழ்க்கையில் வெற்றிபெற்ற குழந்தைகளிடமும், அவர்களின் பெற்றோர்களிடமும் இதன் பொருட்டுச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளெல்லாம் வெற்றிபெற்ற குழந்தைகளிடம் இருக்கக்கூடிய சில முக்கியமான குணங்களைப் பட்டியலிட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே காண்போம்.

**அவர்களின் வேலையை அவர்களே செய்ய விடுங்கள்**

ஸ்டன்போர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜூலி ஹைன்ஸ், குழந்தைகள் உளவியல் தொடர்பாகவும், குழந்தை வளர்ப்பு தொடர்பாகவும் பல உரைகள், ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார். 'How to Raise an Adult' என்ற தலைப்பில் அவர் தொடர்ச்சியாக ஆற்றிவரும் உரைகள் சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமானவை. அவர், தான் பார்த்த வெற்றிபெற்ற குழந்தைகளிடம் இருந்த மிக முக்கியமான குணம் என்று 'குழந்தைகளின் அன்றாட வேலைகளை அவர்களே செய்துகொள்வதுதான்' என்கிறார். அவர்களுடைய அன்றாட, சாதாரண வேலைகளைக்கூட அவர்களுக்குப் பதிலாக நாம் செய்துகொண்டிருந்தால், அவர்களுக்கு எப்படித் தன்னம்பிக்கையும், தைரியமும் வரும் என்று அவர் கேட்கிறார்.

தங்கள் வேலைகளை, அதுவும் எளிதான அன்றாட வேலைகளிலிருந்து நேர்த்தியையும், ஒழுங்கையும், நேர மேலாண்மையையும் மிக எளிதாகக் குழந்தைகளால் கற்றுக்கொள்ள முடியும். அது மட்டுமல்லாமல், அப்போது மற்றவர்களின் உதவியை, தேவையை, கஷ்டங்களை அவர்கள் புரிந்துகொள்ளத் தொடங்குவார்கள். அது அவர்களைப் பக்குவப்பட்டவர்களாக மாற்றும். தங்கள் இயல்புகள், குறைகள், போதாமைகள், விருப்பங்கள் என்று குழந்தைகள் தங்களைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்வதற்கும் அது உதவியாக இருக்கும்.

**சக மனிதர்களுடன் உறவாடும் திறனை வளர்த்தல்**

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம், 700 பேரை சிறுவர் பாடசாலைக் காலத்திலிருந்து அவர்களின் 25 வயதுவரை தொடர்ச்சியாகக் கவனித்து ஆராய்ச்சியை மேற்கொண்டது. அதில் 25 வயதில் சிறப்பான ஆளுமை உடையவர்களாகவும், வெற்றிபெற்றவர்களாகவும் இருப்பவர்கள் சிறுவயதிலிருந்தே மற்றவர்களிடம் கனிவாகவும், மிக எளிமையாகப் பழகுபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். சக குழந்தைகளுடன், மனிதர்களுடன் இணக்கமாகப் பழகும் திறன் அந்தக் குழந்தையை வெற்றிப் பாதையை நோக்கி மிகச் சுலபமாகக் கொண்டுசேர்க்கிறது என்கிறது அந்த ஆராய்ச்சி முடிவு.

ஆனால், இன்றைய கல்விச் சூழலில் பெற்றோர்களாகிய நாம் எந்த அளவுக்குக் குழந்தைகளிடம் இதனை அனுமதிக்கிறோம் அல்லது சொல்லித் தருகிறோம்? "அவனை/அவளைவிட நீ நிறைய மதிப்பெண்களை வாங்க வேண்டும்", "அவனை/அவளை நீ இந்தப் போட்டியில் நிச்சயம் வெல்ல வேண்டும்", "அவனை/அவளை விட நீ நன்றாக நடனமாட வேண்டும்" எனச் சிறு குழந்தைகளின் மனதில், அவர்களின் நண்பர்களின் மீது ஒரு போட்டி மனப்பான்மையைத்தான் எந்நேரமும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். சக குழந்தைகளை எப்போதும் போட்டியாளராக நினைத்துக்கொண்டு வளரும் குழந்தைகளால் எப்படி அவர்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடியும்? அதேபோல், "அவர்களோட என்ன பேச்சு? வந்து படி", "பக்கத்து வீட்டுக்கெல்லாம் போகக்கூடாது" என எந்த நேரமும் நமது கைகளுக்குள்ளேயே குழந்தைகளை வளர்த்துவருகிறோம்.

எந்நேரமும் நமது கட்டுப்பாட்டிலேயே வளரும் குழந்தைகள், பழகும் திறனை முற்றிலுமாக இழக்கிறார்கள். முதன்முறையாக சமூகத்தைத் தனியாக எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வரும்போது திணறிவிடுகிறார்கள். மனிதர்களைப் புரிந்துகொள்வதிலும், அவர்களுடன் நீடித்த உறவை ஏற்படுத்திக்கொள்வதிலும் ஏராளமான சிக்கல்களை முதன்முறையாகச் சந்திக்கத் தொடங்குகிறார்கள். அதுதான் அவர்களுடைய வாழ்க்கையின் மிகப் பெரிய சவாலாக அமைந்துவிடுகிறது. சிறு வயதிலிருந்தே அவர்கள் மற்றவர்களுடன் பழகிக்கொண்டிருந்தால், மனிதர்களை எப்படி எதிர்கொள்ள, கையாள வேண்டும் என்பதை எளிதில் கற்றுக்கொண்டிருப்பார்கள். அது, வெற்றியை நோக்கிய பாதையில் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும்.

**அப்பா - அம்மாவுக்கு இடையேயான ஆரோக்கியமான உறவு**

குழந்தையின் அப்பா - அம்மாவுக்கு இடையே இருக்கும் ஆரோக்கியமான, புரிதலுடைய, பக்குவமான உறவு என்பது குழந்தையின் எதிர்காலத்துக்கும், அதன் மனநிலைக்கும் மிகவும் அவசியமானது என்று பல ஆராய்ச்சிகள் சொல்கின்றன. ஒரு விடயத்தை எப்படிச் சொல்கிறோம், அதைப் பற்றி எப்படி உரையாடுகிறோம், அந்த விடயத்தில் நமது முரண்களை எப்படிக் களைகிறோம், அதன் பொருட்டு எப்படி ஒருமித்த உறவுக்கு வருகிறோம் என்பதையெல்லாம் குழந்தைகள் தொடர்ச்சியாக நம்மிடம் கவனித்தே வளர்கின்றார்கள்.

அதிலிருந்து குழந்தைகள் நிறைய கற்றுக்கொள்கின்றார்கள். அதன்படியே அவர்களும் நடந்துகொள்கிறார்கள். அதேபோல் பெற்றோர்கள் ஒரே நேரத்தில் இரண்டு எதிர்மறையான போக்கில் குழந்தைகளிடம் நடந்துகொள்வதும் குழந்தைகளிடையே குழப்பத்தை அதிகரிக்கும். உதாரணத்துக்கு அம்மா, "தொலைக்காட்சியே பார்க்கக்கூடாது. அவ்வாறு பார்த்துக்கொண்டிருந்தால் படிப்பு வராது" என்று சொல்லும் நேரத்தில், "அப்படியெல்லாம் குழந்தையை பயமுறுத்த வேண்டாம். தொலைக்காட்சி பார்த்தால் அறிவு நன்கு வளரும்" என்று அப்பா சொல்வதைத் தவிர்க்கவேண்டும். பெற்றோர்களுக்கிடையே ஒரு விடயம் குறித்து கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், குழந்தையிடம் ஒற்றைக் கருத்து மட்டுமே சொல்லப்பட வேண்டும்.

**பெற்றோர்களின் மனஅழுத்தம்**

அலுவல்கள் தொடர்பாகவோ, குடும்பப் பொறுப்புகள் தொடர்பாகவோ பெற்றோருக்கு ஏற்படும் மன உளைச்சல்கள் குழந்தைகளின் மனநிலையை பாதிக்கின்றன என்கின்றன ஆய்வுகள். நீங்கள் அதை வெளியே சொல்லவில்லையென்றாலும் உங்கள் நடவடிக்கைகள், உடலசைவுகள், முகத்தோற்றங்களை வைத்து குழந்தைகள் அதனை ஊகித்துவிடுவார்கள். அதனால், குழந்தைகள் இருக்கும் வீட்டில் எந்தவொரு சிக்கலையும் நீடிக்க விடாமல் அதற்கான தீர்வைத் தேடி, உடனடியாக அதனை சரிசெய்துகொள்வது அவசியம்.

தாய், தந்தை இருவரும் வேலைக்குப் போகும் சூழலுள்ள குடும்பங்களில் இதுபோன்ற மன உளைச்சல்கள் அதிகமாக வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, அதை முடிந்தவரை குழந்தைகளிடம் காட்டாமல் இயல்பாக நடந்துகொள்வதும், அப்படி ஒருவருக்கு மன அழுத்தம் இருக்கும்போது இன்னொருவர் அக்கறையுடனும், கரிசனத்துடனும் அருகே இருந்து அவரைப் பார்த்துக்கொள்வதும் குழந்தையின் மனநிலையில் நேர்மறையான எண்ணங்களை உருவாக்கும்.

**வாசிப்புப் பழக்கம்**

இன்றைய மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கம் குறைந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. டிஜிட்டல் சாதனங்களின் வரவு அதற்கு முக்கிய காரணமாக இருந்தாலும், அது மட்டுமே முழுமையான காரணமல்ல. மாணவர்களின் உலகம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் போட்டி நிறைந்த உலகமாகிக் கொண்டிருக்கிறது. இயல்பான கல்வியை போட்டியாக மட்டுமே பார்க்கக்கூடிய சூழல் உருவாகியிருக்கிறது. அதனால், கல்விக்கு வெளியே வாசிப்பு என்பது குழந்தைகளிடம் தேவையற்ற வேலை என்பது போன்ற கருத்தைப் பெற்றோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வாசிப்பின் மீதான ஆர்வம் புறந்தள்ளப்படுகிறது. அது எந்த வகையிலும் போட்டியில் வெல்வதற்கு உதவாது என்ற மனப்பான்மையைப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளிடம் ஏற்படுத்துகிறார்கள். ஆனால், உண்மையில், வாசிப்பு என்பது குழந்தைகளின் அறிவுத்திறனை, கற்றல் திறனை மேம்படுத்துகிறது என்றே ஆய்வுகள் சொல்கின்றன. பாடப்புத்தகங்களைத் தாண்டிய வாசிப்புகள் குழந்தைகளின் சிந்தனைகளைக் கூர்மைப்படுத்துகின்றன.

வெற்றிபெறும் குழந்தைகளின் பொதுவான பண்புகளாக இவையெல்லாம் இருக்கின்றன. அதனால், குழந்தைகளிடம் குறைந்தபட்சம் இந்தப் பழக்கவழக்கங்களை ஏற்படுத்துவது பெற்றோர்களின் பொறுப்பு.

• **சிவபாலன் இளங்கோவன்**
*மனநல மருத்துவர்/எழுத்தாளர்.*

## தவக்கால சிந்தனை



**கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்.**

மனிதர்கள் தம் தேவைகளை நிறைவுசெய்ய எவ்வளவுதான் முயன்றாலும் அதில் முழுமையாக வெற்றிபெறுவதில்லை. மனித வாழ்வின் நிறைவு அந்த வாழ்வையும் தாண்டிச் செல்கின்ற ஒன்றாகவே இருக்கிறது. அந்த நிறைவை நமக்குக் கடவுள் ஒருவரே கொடையாக வழங்க முடியும்.

அதே நேரத்தில் நம் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவுசெய்யவும் நாம் கடவுளின் உதவியை நாட வேண்டுமென்றும், அவ்வாறு நாம் கடவுளை நாடிச் செல்லும்போது அவர் நமக்கு உதவுவார் என்றும் இயேசு கற்பிக்கிறார்.

நாம் கேட்பதையெல்லாம் கடவுள் தருவார் என்பதற்குப் பதிலாக நமக்குத் தேவை எதுவென கடவுள் கருதுகிறாரோ அதனை நமக்குத் தருவார் என்பது பொருத்தமாகும். வீட்டில் பிள்ளைகள் தாம் விரும்பும் பொருட்களைத் தம் பெற்றோரிடம் கேட்டுப் பெறுவார்கள். இயேசுவுக்கும் அந்த வாழ்வு அனுபவம் இருந்தது.

எனவே, அவர் நம் வானகத் தந்தையாகிய கடவுளை, நாம் அவருடைய பிள்ளைகள் என்னும் முறையில் அணுகிச் சென்று நம் தேவைகளை அவரிடம் எடுத்துக் கூறினால் நமக்கு எது நன்மையோ அதனைக் கடவுள் செய்யாமல் இருக்கமாட்டார்.

## இன்றைய நாளில்...

- 1876 – அலெக்சாண்டர் கிரஹம்பெல் உலகின் முதல் வெற்றிகரமான தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.
- 1893 – ஐவரி கோஸ்ட் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகியது.
- 1902 – துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நிலநடுக்கத்தினால் முற்றாக அழிந்தது.
- 1922 – கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மா காந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். எனினும், இரண்டாண்டுகளில் குடல்வால் அழற்சி காரணமாக விடுதலையானார்.
- 1948 – இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1952 – கியூபாவில் புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டா தலைமையில் இராணுவப் புரட்சி வெற்றி பெற்றது.
- 1977 – யுரேனஸ் கிரகத்தைச் சுற்றியுள்ள வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- 1982 – கிரகங்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கத்தில் வரிசையில் காணப்பட்டன.
- 2006 – செவ்வாய் உளவு சுற்றுக்கலன் செவ்வாய்க் கிரகத்தை அடைந்தது.

## நக்கல் நமசிவாயம்

**அரசாங்கத்தைவிட்டு இப்போதைக்கு போகமாட்டன் எண்டு சொல்லுறார் மைத்ரி ஐயா..! அப்படியெண்டா இனி கவனமாகத்தான் இருக்கோணும்..!**



## 09.03.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 051 156 | 057 5375 |
| கனேடியன் டொலர் | 062 6084 | 068 7651 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 24 2407 | 25 6 06 |
| யூரோ | 134 3481 | 144 2673 |
| ஜப்பான் யென் | 0 822 | 1 6 |
| சிங்கப்பூர் டொலர் | 053 4818 | 058 4805 |
| ஸ்ரேலிங் பவுன் | 182 8 08 | 2 1 6516 |
| சுவிஸ் பிரான்ங் | 13 8182 | 137 7875 |
| ஐ.அ.டொலர் | 114 1 02 | 118 8876 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 5 7 5857 |
| குவைட் | குவைட் தினார் | 644 3201 |
| ஓமான் | ஓமான் றியால் | 485 851 |
| கட்டார் | கட்டார் றியால் | 51 8510 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 50 058 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 51 3710 |

# சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை சமர்ப்பிக்குக!

## அரசாங்கத்திடம் முன்னாள் பிரதமர் கோரிக்கை



சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள அறிக்கையை விரைவாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்க நேற்று (09) சபையில் கோரிக்கை முன்வைத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது. ஆனால், இதுவரையில் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

ஆகவே அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா இல்லையா என்பது தொடர்பில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும். அதேபோன்று, விரையில் அந்த அறிக்கையை சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த ஆரம்ப அறிக்கை குறித்து மத்திய வங்கியினூடாக அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தை பெற்றுக்கொடுக்க முடிந்தால் அதனையும் பெற்றுக்கொடுக்க ஆளுந்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த அறிக்கையை பெற்றுக்கொடுத்தால் அதனை அடிப்படையாகக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்படும்.

சர்வகட்சி மாநாடு இடம்பெறுமாக இருந்தால் அதன்போது கருத்து வெளியிடக்கூடியதாக இருக்கும். இந்த வாரத்திலேயே அந்த அறிக்கையை பெற்றுக்கொடுக்க முடியமாக இருந்தால் அதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தார்.

# ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கை பிரகடனத்துக்கமைய மன்னாரில் மரக்கன்றுகள் நாட்டிவைப்பு





(மன்னார் நகர் நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக இலங்கையை பசுமையாக்கி மக்களை வாழ வைத்தல் எனும் திட்டத்தின் அடிப்படையில் மர நடுகை நிகழ்வு நேற்று (9) மன்னார் துப்பாசி ஆலம் பகுதியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

எதிர்வரும் வருடம் இலங்கை சுதந்திரம் பெற்று 75ஆவது வருடம் பூர்த்தியாகும் நிலையில், 2023 பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் 75 லட்சம் மரங்களை நட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்திற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் முதலாவது நிகழ்வாக குறித்த மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி, நீர்ப்பாசன பொறியியலாளர்கள், வனத்துறை அதிகாரி, விவசாய அமைப்பின் தலைவர், மாவட்ட விவசாய அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட சுற்றாடல் மேம்பாட்டு அதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

# சீனத் தூதுவர் சபாநாயகர் சந்திப்பு





இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் சந்தித்தார்.

இரு நாட்டு நாடாளுமன்றங்களுக்கிடையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. கொவிட் 19 சவால்மிக்க சூழலில் சீன அரசு இலங்கைக்கு வழங்கும் பல்வேறு உதவிகளுக்கும் சபாநாயகர் அந்நாட்டு அரசுக்கு தனது நன்றிகளை தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

# நாடாளுமன்றத்திலுள்ள அவசியமற்ற மின் விளக்குகளை அணைக்க உத்தரவு

தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவசியமற்ற மின்விளக்குகளை அணைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்வதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (9) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற நடவடிக்கைகளின் ஆரம்பத்தின்போது சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்ற வளாகத்தின் அன்றாட நடவடிக்கைகளிலும் குறிப்பாக, உணவகங்களிலும் சில குறைபாடுகள் ஏற்படக்கூடும் என மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறான சிரமங்களை பொறுத்துக்கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு தான் கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய நேற்று முன்தினம் (08) நாடாளுமன்ற வளாகத்திலுள்ள அவசியமற்ற மின்விளக்குகள் அணைக்கப்பட்டதை காணக்கூடியதாக இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# 14 இலட்சம் ரூபா பணமோசடி செய்த இருவர் பொலிஸாரால் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரத்தில் 14 இலட்சம் ரூபா பணத்தினை மோசடி செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கலன்பிந்துனுவெவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தச் சம்பவம் தொடர்பில் கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலையத்திற்கு கடந்த 07ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் (08) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீமின்னாவ, கஹட்டகஸ்திகிலிய மற்றும் பன்வெல்ல, சீப்புக்குளம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 22 மற்றும் 46 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன்பிந்துவெவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 27 இலங்கையர்கள் தொடர்ந்து உக்ரைனில் தங்கியிருக்க விருப்பம்

உக்ரைனிலுள்ள 27 இலங்கையர்கள் தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (09) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெலருஸில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கு கட்டணம் அறவிடப்படாமல் ஒரு மாத காலத்துக்கு விடுமுறை வழங்குவதற்கு நிர்வாகத்தினர் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உக்ரைனில் 81 பேர் உள்ளனர். இவர்களில் 15 பேர் மாணவர்கள். ஏனைய 39 பேர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். 27 பேர் அங்கு இருக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பெலருஸில் 1,561 பேர் இருக்கின்றனர். இவர்களது நலன்களை மொஸ்கோவிலுள்ள எமது தூதரங்கம் கவனித்துவருகிறது. இவர்கள் விரும்பும் பட்சத்தில் ரஷ்யாவிற்குள் பிரவேசிப்பதற்கு விசாவிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தூதரங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அப்துல் ஹக் நினைவு மலர் வெளியீடு நாளை

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

முன்னாள் மன்னார் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஏ.சி.அப்துல் ஹக்கின் 10ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் ஞாபகார்த்தமாக நினைவு மலர் வெளியீடு ஒன்றினை கலையருவி இயக்குனர் அருட்திரு அ.லக்ஸ்ரன் டி சில்வாவின் ஏற்பாட்டில் மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் மன்னார் நகர சபையின் கலாசார மண்டபத்தில் நாளை 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவிருக்கின்றது.

நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் தேவராஜா தேவதயாழினி, மன்னார் முன்னாள் அரசாங்க அதிபர்களான எஸ்.மரியதாசன் குரூஸ், வி. விஸ்வலிங்கம், வடகிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக முன்னாள் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர்களான எம்.ஆபேல் றெவல், எம்.எம்.சியான், எஸ்.சுகந்தினி செபஸ்ரியான், துணுக்காய் மற்றும் மடு முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாலினி வெனிற்றன் உள்ளிட்ட பல கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இனமத பேதத்திற்கு அப்பால் கல்விக்கு ஆற்றிய பணிக்காக மன்னார் நகர சகோதர இன மக்களால் மறைந்த ஒரு முஸ்லிம் கல்விப் பணிப்பாளருக்கு ஞாபகார்த்த மலர் வெளியிடுவது மன்னார் நகரின் இன நல்லிணக்கத்தின் ஒரு வெளிப்பாடாக இது அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தத்துவம் தங்கராசு



நாட்டின் பொருளாதார நிலைமையை நன்றாய் இறுக்கவேண்டும்... மக்களை வீதி வீதியாக அலையவிடவேண்டும்... பெருந்துன்பம் வந்தபின்னர் அமெரிக்காவின் காலில் விழ வேண்டும். மக்கள் கூட ஒன்றும் எதிர்ப்பு சொல்லமாட்டார்கள். அதுதான் பெசிலின் யுக்தி..

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட விமல் வீரவங்ச இப்படி செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார் அல்லவா? இது ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக அவர் பேசுகிறார் என்று அப்போது ஓர் எண்ணம் பலருக்கும் இருந்திருக்கும். எனக்கும்தான்.

ஆனால் நாட்டின் நிலைமையினை பார்க்கையில் விமல் சொன்னது சரியாகத்தான் இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கரண்ட் இல்லை.. கேஸ் இல்லை .. அத்தியாவசிய சாமான்கள் தட்டுப்பாடு, எரிபொருள் இல்லை.. மக்கள் கையில் காசு இல்லை... இருக்கிறது என்ற வார்த்தைக்கு பஞ்சம் என்ற அளவுக்கு எல்லாமே இல்லை இல்லை என்றுதான் பேச்சு.

எல்லாமே டொலரில் தங்கியிருப்பதால் அமெரிக்காவின் கையில்தான் எல்லாம் இருக்கிறது போலும். சரி மக்கள் கஷ்டப்படாமல் இருக்க பேசாமல் அமெரிக்காவிடம் முழு நாட்டையும் கொடுத்துவிடலாமே .அமெரிக்க பாஸ்போர்ட்டாவது நமக்கு கிடைக்கும். என்ன, நான் சொல்வது சரிதானே?

# போலி தாதியர் பட்டப்படிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்








அகில இலங்கை தாதியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (09) கொழும்பில் இடம்பெற்றது.

அகில இலங்கை தாதியர் சங்கத்தினர், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலிருந்து பேரணியாக சுகாதார அமைச்சுவரை சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நகரமண்டப சுற்றுவட்டாரம் மற்றும் சுகாதார அமைச்சின் முன்னால் கடும் வாகன நெரிசலை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தாதியரை தவறாக வழிநடத்தி, தாதியர் கல்வியை சீரழிக்கும் தாதியர் சேவையின் முன்னேற்றத்தை தடுக்கும் வகையில், அரசு மற்றும் அரசு தொழிற்சங்கங்கள் கொண்டு வரும் தரக்குறைவான போலி பெயர்களை கொண்ட பட்டப்படிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், உண்மையான தாதியர் பட்டப்படிப்பை பெற்றுக்கொடுக்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பதுளையில் மாணவியை கொலைசெய்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது

## பலமணிநேரம்தீவிரவிசாரணை

## எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவு





(எம்.செல்வராஜா, என். மலர்வேந்தன், டீ.அசோக்குமார்)

பதுளை உடுவர பகுதியில் பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் நேற்று (08)முன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டதுடன் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று மாலை ஆஜர்படுத்தப் பட்டுள்ளார்.

நீண்டநேர பொலிஸ் விசாரணைகளின் பின்னர் நேற்று (09) மாலை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதவான் நீதிமன்ற நீதவான் சமிந்த கருணாதாச உத்தரவிட்டுள்ளார்.

உடுவர பெருந்தோட்ட கீழ்ப்பிரிவைச் சேர்ந்த தர்மராஜா லிதியா (18 வயது) என்ற மாணவி கோடரியால் வெட்டப்பட்டு நேற்று முன்தினம் (08) மாலை படுகொலை செய்யப்பட்டார்.

இவர் ஹாலி-எலை தமிழ் மகா வித்தியா லயத்தில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்று வந்தவராவார்.

இக் கொலை குறித்து, ஹாலி-எலை பொலிஸாருக்கு தகவல் கிடைக்கவே, பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து, சடலத்தை மீட்டு விசாரணைகளை மேற் கொண்டிருந்தனர்.

உடுவர பெருந்தோட்ட கீழ்ப்பிரிவைச் சேர்ந்த இராமையா திபாகரன் (32 வயது) என்ற இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார். மாணவியின் கொலையையடுத்து, ஹாலி-எலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ருவன் குணதிலக்கவின் ஏற்பாட்டில் நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

சந்தேக நபர் தப்பிச் சென்ற பகுதியை சுற்றிவளைத்த பொலிஸ் குழுக்கள் குறிப்பிட்ட உடுவர புகையிரத நிலையப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக் கைகளை மேற்கொண்ட வேளையில், சந்தேக நபர் சரணடைந்ததுடன் அதன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மாணவியை கொலை செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளாரென ஹாலி-எலைப் பொலிஸார் தெரிவித்தனர்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் கண்டி மாவட்ட பணிப்பாளர் இஃதிஸான் முஹம்மத்தின் தலைமையின்கீழ் கம்பளை செத்சிறி விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பொதுவசதிகள்கூட உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (8) நடைபெற்றது. இந்நிகழ்வில், பாகிஸ்தானில் இடம்பெற்ற சவேட் கிக் பொக்சிங் போட்டியில் பங்குபற்றி எமது நாட்டுக்கு வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுத்தந்த பாத்திமா பஹ்மா விசேட அதிதியாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அஸ்ஹர் இப்றாஹிம்)



பாத்ததும்பறை பிரதேச சபைக்குரிய மடவளை, தெல்தெனிய வீதி, ட்ரவர் லேன் (தொலைபேசி கோபுர ஒழுங்கை) கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதிருந்துள்ளது. இதுதொடர்பில் அரசியல்வாதிகளும் கவனிக்காத நிலையில், நேற்று (09) அப்பிரதேசவாசிகள் இணைந்து சிரமதான அடிப்படையில் அதனைத் திருத்தியமைத்துள்ளனர். சுமார் இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான வேலைகள் பிரதேச மக்களின் உழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதாக குறித்த பிரதேச மக்கள் தெரிவித்தனர். (படங்கள்: கண்டி நிருபர்)

# டிஜிட்டல் தராசு முறைமையை நிறுத்துமாறுகோரி பண்டாரஹெலிய தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

## நிர்வாகத்துக்கு சாதகமான முறைமை எனவும் குற்றச்சாட்டு






(பதுளை நிருபர்)

ஹப்புத்தளை, பண்டாரஹெலிய பெருந் தோட்டத் தொழிலாளர்களால் தோட்ட நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்படும் கொழுந்து நிறுவை டிஜிட்டல் தராசு பயன்பாட்டினை கண்டித்து நிர்வாகத்துக்கு எதிராக நேற்று (09) பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

தங்களால் பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்துகளை நிறுப்பதற்கு பழைய முறையிலான தராசினை தவிர்த்து நவீன முறையிலான டிஜிட்டல் தராசு பாவனையை மேற்கொண்டமையைக் கண்டித்தே, இப்பணிப்பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.

சுமார் ஐநூறு பேர்வரையானோர் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நவீன முறையிலான டிஜிட்டல் தராசு எமக்கு வேண்டாம், இத்தராசினால் நான்கு கிலோ எடை குறைத்தே காட்டப்படுகின்றது. தொழிலாளர்களின் அடையாள அட்டைப் பதிவும் இத்தராசில் பதியப்படுகின்றது. ஆகையினால், இத் தராசுப் பாவனையை உடன் நிறுத்தும்படி தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், இவ் டிஜிட்டல் தராசு நிர்வாகத்துக்கு சாதகமானதெனவும், தொழிலாளர்களின் உழைப்பினை சுரண்டுவதற்கு பயன்படுத் தப்படுவதாகவும் தொழிலாளர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

# மவுஸாகலையில் பற்றைக்காடுகளுக்கு தீவைப்பு; கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை



(மஸ்கெலியா நிருபர்)

மவுஸாகலை நீர்த்தேக்கத்தின் கரையோரப் பகுதியிலுள்ள பற்றைக்காடு நேற்று முன்தினம் (08) மாலை விஷமிகள் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் நான்கு ஏக்கர் பற்றைக்காடு தீக்கிரையானது. இது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், இவ்வனப்பகுதியிலுள்ள வனஜீவராசிகள், பறவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக நீர் ஏந்தும் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுவரும் நிலையில், இப்பகுதியில் பல்வேறு இடங்களில் வனப் பகுதிகளுக்கு தொடர்ச்சியாக தீ வைக்கப்பட்டு வருவதால் பெருமளவு நீரூற்றுகள் நீரின்றி வற்றி வறண்டு போயுள்ளன. இருந்தும் விஷமிகள் இவ்வாறு செய்வதால் மேலும் நீரூற்றுகள் இல்லாதுபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி இயற்கை வளங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள் அசௌகரியம்

(சிவா ஸ்ரீதரராவ்)

காவத்தை நகரில் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாது பிரதேச ஹோட்டல்கள் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மூடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

மேற்படி பிரதேசத்தில் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக தொடர்ச்சியாக உணவகங்கள் மூடப்பட்டு வருவதால் நகர்ப்புறங்களுக்கு வரும் பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், எரிபொருள் நிலையங்களில் டீசலுக்கும் தட்டுப்பாடு நிலவிவருவதால் மேற்படி பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் நாளாந்தம் பஸ் போக்குவரத்துச் சேவைகளும் மந்தகதியில் காணப்படுகின்றன.

மேலும், எரிபொருள் நிலையங்களில் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவிவருவதால் தோட்டப்புற மற்றும் கிராமப்புற மக்கள் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# சுகாதாரம் குறித்து தெளிவுபடுத்தும் நிகழ்வு



(இரத்தினபுரி நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுகாதாரம் குறித்து தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் (08) சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது உலக வங்கித் திட்டத்தின் இணைப்பாளர் விசேட வைத்திய நிபுணர் தீபிகா ஆட்டிகலவினால் "மக்கள் தமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக்கொள்வது" குறித்து தெளிவுபடுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, விசேட வைத்திய நிபுணர் தீபிகா ஆட்டிகலவுக்கு ஞாபகார்த்த சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, சப்ரகமுவ மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கபில கன்னங்கர, மாகாண பிரதான அமைச்சின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் லலித் பம்பரபோட்டுவ உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# இலவச மருத்துவ முகாம்



(தலவாக்கலை நிருபர்)

வொயிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்திய வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் டயகம சௌமியமூர்த்தி தொண்டமான் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 145 வலது குறைந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில், வொயிஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வசந்த புஸ்பகுமார, வொயிஸ் நிறுவனத்தின் நுவரெலியா மாவட்ட பொறுப்பதிகாரி தர்மேந்திரராஜா, நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் பிரதீப விஜயசூரிய, சமூக உத்தியோகத்தர் வி.ஏ.பிரியந்த டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.



பதுளை மாவட்ட சர்வமத செயற்குழுவின் பகுப்பாய்வு செயலமர்வு நேற்று (09) பதுளை ரிவர் சைட் விடுதியில் நடைபெற்றது. இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் மேற்படி செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இச்செயலமர்வில் சமூக வளவாளர்களான ஜீ.ஏ.பிரபாத், எஸ்.தவசீலன், தேசிய சமாதானப் பேரவையின் பிரதான இணைப்பாளர் ரசிகா செனவிரட்ன ஆகியோர் உரையாற்றுவதையும், சர்வமதத் தலைவர்கள் மற்றும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பதுளை நிருபர்)




## NSEE Ecocycle சுழற்சிப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையில் தொழிற்சாலைக் கழிவுகளை பெறுமதிமிக்க வளங்களாக மாற்றும் அதிநவீன வெப்பமுட்டல் பகுப்பு ஆலையொன்றை (Pyrolysis Plant) திறந்துள்ளது








தொழிற்சாலைக் கழிவு முகாமைத்துவத்தில் இலங்கையில் முன்னிலை வகித்து வருகின்ற INSEE Ecocycle, சுழற்சிப் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக தொழிற்சாலைக் கழிவுகளை பெறுமதிமிக்க வளங்களாக மாற்றும் வகையில் அதிநவீன Pyrolysis ஆலையை புத்தளம் சீமெந்து தொழிற்சாலையில் திறந்துவைத்துள்ளது. புதிதாகத் திறக்கப்பட்ட முழுத் திறன் கொண்ட Pyrolysis ஆலை, அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளதுடன், INSEE Ecocycleஇன் நிலையான கழிவு முகாமைத்துவப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக மாறியுள்ளது. ஏனெனில், இது பல்வேறுபட்ட கைத்தொழில்கள் மூலமாக வெளியேற்றப்படும் இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து வளங்களை மீட்டெடுப்பதன் அடிப்படையில் ஒட்டுமொத்த கழிவு முகாமைத்துவத் தீர்வை வழங்குகிறது. புதிதாக நிறுவப்பட்ட இந்த Pyrolysis ஆலைக்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நிலையான சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகளையும் INSEE Ecocycle வழங்குகிறது. குறிப்பாக, தொழிற்சாலைகள் மூலமான அபாயகரமான கழிவுகள், அபாயமற்ற கழிவுகள், வர்த்தகநாம உணர்திறன் பொருட்களை அகற்றுதல் மற்றும் பல தீர்வுகள் அடங்கியுள்ளன.

INSEE Ecocycle இன் புதிய Pyrolysis ஆலை அண்மையில் (பெப்ரவரி 25) இடம்பெற்ற விசேட நிகழ்வில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கைத்தொழில் அமைச்சின் செயலாளரான ஜெனரல் ஆர்.எம்.தயா ரத்நாயக்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன், இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட பணிப்பாளரான (அனைத்து வலயங்களுக்கான) எம்.கே.டி. லோரன்ஸ், வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளரான சமன் குமார, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமேல் மாகாண அலுவலக பணிப்பாளரான என்.ஜி.செனவிரத்ன, புத்தளம் பிரதேச செயலாளரான ரங்கனா ஜெயதிலக்க, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளரான டி.எம்.கே.திசாநாயக்க, புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபரான நிமால் பெரேரா, INSEE Cement நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான நந்தன ஏக்கநாயக்க மற்றும் INSEE Cement நிறுவனத்தின் பணிப்பாளரான சஞ்சீவ சூலகுமார ஆகியோரும் கலந்து சிறப்பித்தவர்கள் மத்தியில் அடங்கியிருந்தனர்.

நிகழ்வில் INSEE Cement நிறுவனத்தின் நிர்வாக சபையின் உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அணியினரும் கலந்துகொண்டனர்.

## Vantage இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் பாராட்டப்பட்டுள்ளது



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் கடந்த 3 வருடங்களாக Ebony Holdings நிறுவனத்தின் Vantage ஒரு கூட்டாளராக எமது நாட்டில் உதைபந்தாட்டத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்பை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மொனார்க் இம்பீரியலில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட விழாவில் இந்த பங்களிப்புகளை பாராட்டி Vantageஇற்கு விசேட விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துடனான அதன் கூட்டாண்மை மூலம் விளையாட்டில் முதலீடு மற்றும் நவீன உதைபந்தாட்டத்தை வளர்ப்பதில் தனது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை Vantage சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது.

இவ்விருது குறித்து Ebony Holdings நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ரசீன் ரஹீம் கருத்துத் தெரிவிக்கையில், “ஒரு முதன்மையான ஆண்களுக்கான ஆடை உற்பத்தியாளர் என்ற வகையில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துடனான எமது கூட்டாண்மை மூலம் நாங்கள் தொடர்ந்து உதைபந்தாட்டத்தின் மீது முதலீடு செய்து வருகிறோம். உலகளவில் பெரும் எண்ணிக்கையான இரசிகர்களைக்கொண்ட இந்த விளையாட்டின் வளர்ச்சியின் ஒரு பகுதியாக இலங்கையில் நாம் இருப்பது ஒரு பெரும் பாக்கியம். உதைபந்தாட்டம் உலகின் மிகவும் பிரபலமான விளையாட்டுகளில் ஒன்றாக இருப்பதால் அதை ஆதரிப்பது மிகவும் பெருமைக்குரியது.

எங்களின் பங்களிப்பை அங்கீகரித்து இந்த விருதை எங்களுக்கு வழங்கியதற்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு நன்றிகள். எதிர்காலத்திலும் எங்களது கூட்டாண்மையை தொடர்ந்து முன்னெடுக்க ஆவலாகவுள்ளோம்” - என்று குறிப்பிட்டார்.

## OPPO அதன் தனித்துவமான FindX5 தொடரை பெப்ரவரி 24இல் வெளியிடுகின்றது

**OPPO பிரத்தியேகமாக வடிவமைத்த NPU MariSilicon X ஐக் கொண்ட முதலாவது சாதனம் Find X5 தொடராகும்**

**Find X5 Pro ஆனது Snapdragon® 8 Gen 1 மொபைல் தளத்தை கொண்டுள்ளது**

ஸ்மார்ட் சாதனங்களில் முன்னணியில் திகழும் தரக்குறியீடான OPPO உலகின் முதலாவது புகைப்படவியல் அனுபவங்களைக்கொண்ட அதன் உயர்நிலை, தனித்துவ ஸ்மார்ட்போனான OPPO Find X5 தொடரின் அறிமுகம் தொடர்பில் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

சிறந்த தரத்திலான தொழில்நுட்பம் மற்றும் கெமரா புத்தாக்க கண்டுபிடிப்புகளுடன் OPPO ஆச்சரியமளிக்கக்கூடிய உயர் நிலையிலான வடிவமைப்பை அறிமுகம் செய்கிறது.

உலகளாவிய Find X5 தொடர் வெளியீட்டு நிகழ்வுகளை காண OPPOவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ((www.oppo.com/en/events/find-x5-series-launch/) ஊடாக பெப்ரவரி 24ஆம் திகதி 11.00 மணிக்கு (இலங்கை நேரப்படி 16.30) OPPO உடனும் #EmpowerEveryMoment ஹேஷ்டேக் ஊடாகவும் இணையுங்கள்.

OPPO INNO Day 2021இல், OPPO அதன் MariSilicon X தொடர்பில் அறிவித்திருந்தது.

இது பிரத்தியேக புகைப்படவியல் நரம்பியல் அமைப்பாக கருதப்படும் Neural Processing Unit ஆகும். இது ஸ்மார்ட்போனில் வீடியோக்களை எடுப்பதிலுள்ள மிகப்பெரிய சவாலான இரவுநேர வீடியோ பதிவை இலகுவாக்குகிறது. அதிநவீன 6nm கட்டமைப்பு, நிகழ்நேர RAW செயலாக்கம், 20 மடங்கு வேகமான 4K AI செயல்திறன் ஆகியவற்றின் மூலம் வீடியோ தரத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதன் மூலம், Find X5 Pro ஆனது இரவில் அதன் திறமையை வெளிப்படுத்துகிறது.



## பொரளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் மேம்பாட்டை வளர்க்கும் DPMC





டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினால் அனுசரணை வழங்கப்பட்ட பொரளை சிலோன் ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் (CGTTI) முதலாவது தொகுதி மாணவர்கள் அண்மையில் பயிற்சியை முடித்து வெளியேறியதுடன், ஓரேநேரத்தில் இரண்டாவது தொகுதிக்கான மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.

சிலோன் ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் பொரளை நிலையம் தற்காலிகமாக செயற்படாதிருந்த நிலையில் DPMC நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 2019ஆம் ஆண்டு தனது செயற்பாட்டை மீள ஆரம்பித்தது. பயிற்சித் தேவைகளுக்காக பஜாஜ் முச்சக்கரவண்டி மற்றும் இரண்டு மோட்டார்சைக்கிள்கள் என்பன விசேட கருவிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பயிற்சி உபகரணங்களுடன் வழங்கப்பட்டன.

இந்த வருடத்தில் தேசிய தொழிற்பயிற்சி தரம் 04 (NVQ 04) பாடநெறி, பொரளை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் ஆறு மாத தத்துவார்த்தப் பயிற்சியையும், அதனைத் தொடர்ந்து DPMC வேலைத்தளத்தில் ஆறு மாத காலங்கள் சம்பளத்துடன் கூடிய வேலைப் பயிற்சியையும் உள்ளடக்கியிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த DPMC நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் (சேவைகள்) சன்ன ரணவக்க குறிப்பிடுகையில், “இங்கு பயிற்சிபெற்ற முதலாவது தொகுதியைச் சேர்ந்த 20 மாணவர்களில் 06 பேர் ஏற்கனவே DPMC வேர்க்ஷொப்பில் வேலைக்கான பயிற்சியைத் தொடங்கியுள்ளனர். ஏனைய 14 மாணவர்கள் தாம் வசிக்கும் பகுதிகள் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள DPMC சேர்விஸ் முகவர் நிலையங்களில் தமது பயிற்சிகளைப் பெறுகின்றனர்” - என்றார்.

சிலோன் ஜேமர்ன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பொரளை நிலையத்துடன் இணைந்து இத்திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க DPMC எதிர்பார்ப்பதாக ரணவக்க கூறினார்.

## பணியாற்றுவதற்கு சிறந்த இடத்துக்கான GPTW விருதை வென்ற லங்கா வோல் ரைல்ஸ் குழுமம்



லங்கா வோல் ரைல்ஸ் குழுமம் பணியாற்றுவதற்கு சிறந்த இடமாக Great Place To Work விருதை வெற்றிபெற்றிருப்பதை பெருமையுடன் அறிவித்துக்கொள்கிறது. 2021 நவம்பர் 17ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் இந்தப் பெருமைக்குரிய அங்கீகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. லங்கா வோல்ட் ரைல்ஸ் பிஎல்சி, லங்கா ரைல்ஸ் பிஎல்சி, ஸ்விஸ்டெக் சிலோன் பிஎல்சி மற்றும் ஸ்விஸ்டெக் அலுமினியம் லிமிடெட் ஆகிய நான்கு நிறுவனங்கள் சார்பிலும் லங்கா வோல் ரைல்ஸ் குழுமம் இந்த விருதை வென்றுள்ளது.

லங்கா வோல் ரைல்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா ரைல்ஸ் பிஎல்சி நிறுவனங்கள் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக இலங்கையின் முன்னணி செரமிக் வோல் ரைல்ஸ் உற்பத்தியாளர், சந்தையின் முன்னணி மற்றும் முன்னணி ஏற்றுமதியாளராக விளங்கி வருகின்றன. சுவிஸ்டெக் சிலோன் பிஎல்சி மற்றும் சுவிஸ்டெக் அலுமினியம் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் ஒரு தசாப்தத்துக்கு மேலாக குழுமத்தின் உறுப்பினர்களாகக் காணப்படுவதுடன், அவை தமது துறையில் சந்தையின் கணிசமாகப் பங்காற்றுகின்றன.

அண்மைய அங்கீகாரம் குறித்துக் கருத்துத் தெரிவித்த லங்கா வோல் ரைல்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளர்மகேந்திர ஜயசேகர குறிப்பிடுகையில்,

”லங்கா வோல் ரைல்ஸ் குழுமம் பணியாற்றுவதற்கு சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஒப்பிடமுடியாத மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய தரத்துடன் உற்பத்திகளை வழங்கி லங்கா வோல் ரைல்ஸ் பொதுமக்களுக்குக் கடந்த மூன்று தசாப்தங்களாக சேவையாற்றி வருகிறது. எமது பணியாளர்கள், எமது பணியாளர்களை நடத்தும் விதம் தொடர்பான எமது நோக்கம் மற்றும் ஒரு நிறுவனமாக நாம் பணியாற்றும் விதம் என்பனவே எமது நீண்டகால வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளன” - என்றார்.

## 19 ஆவது ஆண்டாகவும் அட்லஸ் சிப்சவியினால் ரிதீ விஹாரை நன்கொடைத் திட்டத்தினூடாக குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களுக்கு பெறுமதி சேர்க்கும் பணி முன்னெடுப்பு







இலங்கையின் முன்னணி காகிதாதிகள் மற்றும் பயிலல் சாதன வர்த்தக நாமமான அட்லஸ், தனது வருடாந்த ரிதீ விஹாரை நன்கொடைத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. தொடர்ச்சியான 19ஆவது வருடமாகவும் சுமார் 2300 குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களுக்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அட்லஸ் சிப்சவி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், ரிதீ கமஇ ரிதீ விஹாரையைச் சேர்ந்த சங்கைக்குரிய திப்பட்டுவே புத்தரக்கித தேரரின் மேற்பார்வையின் கீழ் நன்கொடை வழங்கல் இடம்பெற்றது. இந்த ஆண்டு நன்கொடை வழங்கும் நிகழ்வின்போது 100 மாணவ பௌத்த பிக்குகளுக்கும் அட்லஸ் கொப்பிகள் வழங்கப்பட்டிருந்தன.

அட்லஸ் அக்சிலியா கம்பனி. பிரைவேட் லிமிடெட் முகாமைத்துவப் பணிப்பாளர் அசித சமரவீர கருத்துத் தெரிவிக்கையில், “நாடு முழுவதையும் சேர்ந்த சிறுவர்களுக்கு 62 வருடங்களுக்கு மேலாக சேவைகளை வழங்கிவருவதுடன், அவர்களின் கடினமான சூழ்நிலைகளைப் பற்றி இரகசியமான முறையில் நாம் அறிந்துகொண்டு ஒவ்வொரு பிள்ளைக்கும் சிறந்த கல்வி பயிலல் தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கு எம்மாலான பங்களிப்புகளை வழங்க எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

ரிதீ விஹாரையுடனான எமது நிகழ்ச்சித் திட்டம் சுமார் இரண்டு தசாப்த காலமாக முன்னெடுக்கப்படுகின்றது. எமது தேசத்தின் எதிர்கால சந்ததியினருக்கு உதவும் எமது நடவடிக்கைகளை அட்லஸ் சிப்சவி நடவடிக்கைகளின் கீழ் கொண்டுவந்துள்ளோம்.

மேலும், அட்லஸ் புத்தகமொன்றை எவரும் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அட்லஸ் சிப்சவி புலமைப்பரிசில் நிதியத்துக்கு ஒரு பகுதி பங்களிப்பு செய்யப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகள் அவர்களின் பெற்றோரின் இழப்பு மற்றும் பொருளாதார சிக்கல் நிலை போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு உதவக்கூடிய வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுப்பதற்கு சிப்சவி மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்றையும் முன்னெடுத்திருந்தோம்” - என்றார்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் சங்கைக்குரிய திப்பட்டுவே புத்தரக்கித தேரர் கருத்துத் தெரிவிக்கையில், “அட்லஸ் மற்றும் ரிதீ விஹாரை நீண்டகாலமாக பேணிவரும் பங்காண்மையினூடாக கடந்த 18 வருட காலப்பகுதியில் ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு தமது கல்வியைத் தொடர உதவியாக அமைந்திருந்தது. பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இந்தக் காலகட்டத்தில் அட்லஸ் முன்னெடுத்துள்ள இந்தத் திட்டம் தொடர்பில் அட்லஸுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்” - என்றார்.


திகதி 08.03.2022
செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4700
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,896,820.00
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 0 9 7 4 4 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,344,109.00

Mega POWER மெகா பவர் 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1048
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,766,120.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 240,096,710.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
L 23 01 38 39 46

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 730
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,732,880.00
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 11 24 38 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 101,248,699.20

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# யாழில் பஸ் சாரதியின் மூக்கை வெட்டிய நபர்

(யாழ். நிருபர்)

யாழில் தனியார் பஸ்ஸை இடைமறித்த நபரொருவர் சாரதியின் மூக்கை கத்தியால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளார்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த குறித்த தனியார் பஸ்ஸை நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் வீதியில் வழிமறித்த நபரொருவர், சாரதியின் மூக்கை கத்தியால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளார்.

அதனையடுத்து அங்கு நின்றவர்கள் சாரதியை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# அரசோடு இணைந்து இயங்கிய கூட்டமைப்பினர் தனது நண்பரை பாதுகாக்கவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரவில்லை

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

கடந்த நல்லாட்சி காலத்தில் அரசோடு சேர்ந்து இயங்கிய கூட்டமைப்பினர் தனது நண்பரை பாதுகாக்கவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரவில்லை. இந்தியா இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவிகளை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்திருப்பதற்கு தமிழ்ப் பேசும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்தியாவை 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கோரி கடிதம் கையளித்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம் - என வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அவரது வாசஸ்தலத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசின்போது அரசாங்கத்தோடு சேர்ந்து பயணித்த கூட்டமைப்பினர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை




நீக்கும் செயற்பாட்டை அப்போதே நிறைவேற்றியிருக்கலாம். ஆனால், தமது நண்பருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதற்காக அதனை செயற்படுத்தாமல் விட்டிருக்கிறார்கள். கடந்த 43 வருடங்களாக மக்களுக்கு எதிரான ஒரு சட்டமாக பயங்கரவாதத் தடைச்சட்டம் இருந்து வருகின்றது.

எனினும், காலம் கடந்தும் கூட்டமைப்பின் இளைஞர் அணி இதையாவது செய்துகொண்டு போகிறார்கள் என்பதை நாங்கள் நல்ல விதத்திலே பார்ப்போம். ஆனால், அரசியல் ரீதியாக பிழையான கருத்துகளை முன்வைக்கவில்லை.

அத்தோடு, இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவிகளை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு இந்திய அரசாங்கமானது கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. அத்தோடு 13ஆவது திருத்தச் சட்டம் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கோரியிருக்கின்றது. இதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவை கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பியமையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆனால், அனைத்து கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக இருந்தால் காலம் கனிந்து நல்லதே நடக்கும் என ஏற்கனவே கூறியிருந்தோம். அதன் ஓர் அங்கமாகக்கூட இது இருக்கலாம் – என்றார்.

# கர்ப்பமுற்ற 17 வயது சிறுமி வைத்தியசாலையில் சேர்ப்பு

## சிறிய தந்தை கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 17 வயது சிறுமி ஒருவர் கர்ப்பம் தரித்த நிலையில் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின்பேரில் சிறுமியின் சிறிய தந்தை பூவரசன்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் குடும்பம் ஒன்றின் கணவன் விட்டுச்சென்ற நிலையில், பெண் ஒருவர் இரண்டு பிள்ளைகளுடன் வேறு ஒருவரை திருமணம் செய்திருந்தார்.

குறித்த பெண் வேலை வாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாட்டுக்கு சென்றுள்ள நிலையில் இரு பிள்ளைகளும் சிறிய தந்தையாருடன் வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில் 17 வயது சிறுமி உடல்நிலை சுகவீனமுற்ற நிலையில் பூவரசன்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது குறித்த சிறுமி கர்ப்பம் தரித்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதனைகயடுத்து, பூவரசன்குளம் பொலிஸார் சிறுமியிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து தாயின் இரண்டாவது கணவரான சிறிய தந்தை பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இனந்தெரியாதவர்களால் அடித்து நொறுக்கப்பட்ட ஹயஸ் வாகனம்



(யாழ். நிருபர்)

யாழ். நவாலி பகுதியிலுள்ள வீடொன்றின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனம் கடந்த திங்கட்கிழமை (07) இனந்தெரியாத நபர்களினால் அடித்து நொறுக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்ட வாகனத்தை மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வனிதாபிமான போட்டியில் அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட வவுனியா பெண் ஊடகவியலாளர்




சமூக சேவையினை முன்னிலைப்படுத்தி அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 09 பெண்களில் வடமாகாணத்திலிருந்து வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் திருமதி சிவகுமார் திவியா தெரிவாகிய நிலையில், சர்வதேச மகளிர் தினமான நேற்று முன்தினம் (08) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையின் வனிதாபிமான 2021ஆம் ஆண்டுக்கான போட்டியில் 10 துறைகளில் 09 மாகாணங்களிலும் பெண்களிடையே போட்டி இடம்பெற்றது. இதில் சமூக சேவையில் வட மாகாணத்தில் முதலிடம் பெற்ற ஊடகவியலாளர் திருமதி சிவகுமார் திவியா ஏனைய மாகாணங்களில் முதலிடம் பெற்றவர்களுடன் இணைத்து கௌரவிக்கப்பட்டார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு வருடா வருடம் குறித்த வனிதாபிமான போட்டி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்புத்துறையில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் நேற்று முன்தினம் மதியம் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த சு.சுதர்சன் என்ற 29 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சீமெந்து கல் அரியும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின்சார வயரிலிருந்து ஏற்பட்ட மின் ஒழுக்கால் கல் அரியும் இயந்திரத்துக்கு மின் பாய்ந்துள்ளது என்றும், இயந்திரத்தை இயக்கிய இளைஞர் மின் தாக்கத்துக்கு இலக்கானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவிக்கு காசோலை வழங்கிவைப்பு




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் உறவினர் ஒன்றியத்தினால் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவி ஒருவருக்கு 02 இலட்சம் ரூபா காசோலை வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்துகொண்டு காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் உறவினர் ஒன்றிய பிரதிநிதிகள், மாணவியின் பெற்றோர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் நிலையத்திலிருந்த ஆந்தை வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைப்பு



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பறக்க முடியாத நிலையில் காணப்பட்ட ஆந்தைக்குஞ்சியினை நேற்று முன்தினம் இரவு மீட்ட பொலிஸார், அதனை வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

ஒப்படைக்கப்பட்ட ஆந்தைக்குஞ்சு மருத்துவ சிகிச்சைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை வைத்திய நிலையத்தில் அதிகாரிகளால் கையளிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலை வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ். நிருபர்)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ் மொழிமூலமான மூன்று வருடகால வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் ஏப்ரல் 08ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பதிவிறக்க முடியும்.

விண்ணப்ப மற்றும் பரீட்சை கட்டணமாக ரூ.1000 இனை 050122150001411 என்ற மக்கள் வங்கி கணக்கிலக்கத்துக்கு செலுத்தி, பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அல்லது பிரதி பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு - 2020/2021 என குறிப்பிட்டு, பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

# சிறுமியை கடத்திச் சென்ற இளைஞன் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது

(யாழ். நிருபர்)

15 வயதுச் சிறுமியை பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்று குடும்பம் நடத்திய 18 வயது இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் 18 வயது இளைஞனும் 15 வயதான சிறுமியும் காதலித்து வந்துள்ளனர். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சிறுமி வீட்டில் இருந்து வெளியேறி காணாமல்போயுள்ளார்.

அது தொடர்பில் சிறுமியின் பெற்றோரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமி தான் காதலித்த இளைஞனுடன் வீடொன்றில் வாழ்வதனை அறிந்து, அங்கு சென்று சிறுமியை மீட்டதுடன், இளைஞனையும் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ள பொலிஸார், இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொய்யாப்பழம் பறிக்க மரத்தில் ஏறிய மாணவி

## கிணற்றில் தவறி வீழ்ந்து பலி

முல்லைத்தீவு மாங்குளம் புதிய கொலனிப் பகுதி மாணவி ஒருவர் தனது வீட்டில் கிணற்றுக்கு அருகிலுள்ள கொய்யா மரத்தில் பழம் பறிக்க ஏறியபோது கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 09 இல் கல்வி கற்றுவரும் 14 வயதான தயாபரன் தர்மினி என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது உயிரிழப்பு தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சுதர்சன் சென்று பார்வையிட்டுள்ளதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பணித்துள்ளார்.

# மன்னாரில் எரிவாயு இன்மையால் மூடப்பட்டன உணவகங்கள்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் நிலவி வருகின்ற எரிவாயு தட்டுப்பாட்டினால் அநேகமான உணவகங்கள் மூடப்பட்டுள்ளதுடன், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக மன்னாரில் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வந்த நிலையில் நேற்று புதன்கிழமை அநேகமான உணவகங்கள் எரிவாயு நிறைவடைந்த நிலையில், கடைகளை மூடி வியாபார நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளன.

அதே நேரம் வீடுகளில் எரிவாயுக்களை பயன்படுத்தும் மக்களும் எரிவாயு தட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இன்மையால் வாகன உரிமையாளர்கள் பெரல்கள் மற்றும் கலன்களுடன் எரிபொருள் நிலையங்களில் காத்திருக்கின்றனர்.

அரச எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரச வாகனங்கள் மற்றும் முப்படையினருக்கு மாத்திரமே டீசல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மிகவும் கடினமான சூழ்நிலையில் நாடு!

## சிந்தித்து அவதானமாக செயற்பட வேண்டியதே தற்போதைய அவசியமென பிரதமர் தெரிவிப்பு

மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம். நாட்டில் மின்சாரம், டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும்போது பெண்கள் பாதிக்கப்படுவதும் எமக்குத் தெரியும். ஆகவே, இவ்வாறானவொரு சந்தர்ப்பத்தில் சிந்தித்து செயற்பட வேண்டியது அவசியம் - என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற 2022 சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் சர்வதேச மகளிர் தின தேசிய நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச மகளிர் தினத்தில், நமது நாட்டிற்கும், எனது அரசியல் வாழ்விற்கும் சிறந்த முன்னுதாரணமாக விளங்கிய ஒரு பெண்மணியை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க. 1970ஆம் ஆண்டு இலங்கையின் இளம் நாடாளுமன்ற உறுப்பினராக நான் நாடாளுமன்றம் சென்றபோது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவே எனது தலைவியாக விளங்கினார்.

அரசியலில் நான் கண்டிராத துணிச்சலான தலைவி அவர். அதேபோன்று நாட்டின் மீது அன்புடனும், தேச உணர்வுடனும் நாட்டை வழிநடத்திய தலைவியாவார். இலங்கையில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அந்த காலகட்டத்தில் அது ஒரு பெரிய துணிச்சலான நடவடிக்கை என்று கூறலாம். வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன.

அவர் தனது நாட்டை வளமாக்குவதற்கு நம் நாட்டின் உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப துணிச்சலாக உழைத்தார். இலங்கையை விவசாயத்தில் தன்னிறைவு அடையச்செய்வதற்கும், உள்ளூர்





கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் மிகுந்த உறுதியுடன் பாடுபட்ட தலைவி திருமதி சிறிமாவோ ஆவார்.

நாட்டை தன்னிறைவு அடையச்செய்ய உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அயராது உழைத்தபோது, பல விமர்சனங்களையும் சவால்களையும் சந்திக்கவேண்டியிருந்தது. உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மஞ்சள் செடியிலிருந்து எமக்கு தேவையானவற்றை நாமே உற்பத்திசெய்ய முயலும்போது பெரிய சவால்களை சந்திக்கவேண்டியுள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்க எதிர்கொண்ட அனைத்து சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் நாமும் முகங்கொடுக்கின்றோம். நாட்டில் பெண்கள் என்ன விரும்புகிறார்கள், நாட்டின் சுதந்திரத்தைப் பற்றி பெண்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

உலகமே ஏற்றுக்கொண்ட ஒரு விடயம்தான் பெண்களுக்குள்ள மிகப் பெரிய பிரச்சினை போர். போரினால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உக்ரைனும் ரஷ்யாவும் மோதிக்கொண்டாலும், அமெரிக்காவும், ஈராக்கும் மோதிக்கொண்டாலும் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே.

வடக்கில் சிறுமிகளை விடுதலைப் புலிகள் போருக்கு வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்றனர். போருக்குச் சென்றவர்களின் ஆயிரக்கணக்கான மனைவிகள் விதவைகளானார்கள். ஒவ்வொரு நாளும் வடக்கில் போரில் இறந்த ஒரு இளைஞனின் உடல் தெற்கில் எங்காவது ஒரு வீட்டிற்கு கொண்டுவரப்படும். வடக்கு, கிழக்கு எல்லைக் கிராமங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் மரண பயத்தில் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், ஈஸ்டர் தாக்குதலின் மூலம், நம் நாட்டுப் பெண்களுக்கு மீண்டும் அத்தகைய அச்சம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், பெண்களுக்கு மீண்டும் அவ்வாறான அச்சம் ஏற்படாத வகையில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

கொரோனா நெருக்கடியால் பெண்கள் வெளிநாடு செல்வதை நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தற்போதைய டொலர் நெருக்கடி பிரச்சினைக்கு அதுவும் ஒரு காரணம்.

ஆடை கைத்தொழில் மற்றும் தேயிலை இலைகளின் ஊடாக டொலர்களை இந்த நாட்டிற்கு கொண்டுவந்தவர்கள் பெண்கள். பெருந்தோட்டத்துறையில் நாம் சம்பளத்தை அதிகரிக்கின்ற போது அதிகளவு பயன்பெறுவது பெண்களே.

ஆடைத் தொழிற்சாலைகள் திறக்கப்பட்டால், பெண்கள் அதிகளவில் பயனடைவார்கள். அது மாத்திரமன்றி இன்று பல்கலைக்கழகங்களில் பெண்களே அதிகளவில் அனுமதிக்கப் படுகின்றனர். இன்று நாம் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம். நாட்டில் மின்சாரம், டீசல், எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும்போது பெண்கள் பாதிக்கப்படுவது நமக்குத் தெரியும். அண்மையில் ஜனாதிபதியின் இல்லத்திற்கு முன்னால் சென்ற பெண் ஒருவர் இதுபற்றி உங்களுக்கு தெரியுமா எனக் கேட்டுள்ளார். எவரும் கூற வேண்டியதில்லை. அவை ஜனாதிபதிக்கு தெரியும்.

இரண்டாவது கொரோனா அலையின்போது அக்குழுவினர் நாட்டை மூடுமாறு ஜனாதிபதியை கட்டாயப்படுத்தியது எனக்கு நினைவிருக்கிறது. அவ்வாறு மாதக்கணக்கில் மூடப்படும்போது நாடு பொருளாதாரப் படுகுழியில் விழும் என்பதை நாட்டை மூட நினைத்தவர்கள் அறிந்திருந்தார்கள்.

நாட்டை மூடி ஆடைத் தொழிற்சாலையை திறந்தபோது அதனையும் மூடுமாறு அழுத்தம் கொடுத்தனர். நாடு மூடப்படும்போது மக்கள் அதிக துன்பங்களை அனுபவிக்க நேரிடும் என்று மக்களுக்கு கூறிவிட்டே ஜனாதிபதி நாட்டை மூடினார். ஆனால், இன்று அது உண்மையாகிவிட்டது. இன்றைக்கு நாடு மூடப்பட வேண்டும் என்று குரல் கொடுத்த எவரும், துன்பப்படும் உங்களுக்காக துணை நிற்கமாட்டார்கள்.

2015ஆம் ஆண்டு எங்களின் அரசாங்கம் தோல்வியை சந்தித்தபோது, எட்டு வருடங்களில் நுரைச்சோலை உட்பட பல மின் உற்பத்தி நிலையங்களை கட்டி முடித்துவிட்டே வீட்டுக்கு சென்றிருந்தோம். எவ்வாறாயினும், நல்லாட்சி அரசாங்கம் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு மெகாவோட்டை கூட தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் இன்று மின்வெட்டுக்கு எதிராக தீபம் ஏற்றி பேரணி நடத்துகிறார்கள்.

இந்த சிரமங்களை மட்டுமல்ல, அதற்கான காரணங்களையும் புரிந்துகொள்ளுங்கள். இதை கட்சி பேதமின்றி சிந்திப்போம். இந்த இக்கட்டான நேரத்தில் பொறுமையாக செயல்படுவோம் - என்றார்.

# இலங்கைக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளை வழங்க டெபியன் எலெக்ட்ரிக் நிறுவனம் ஒத்துழைப்பு

பீஜிங்கிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹொன மற்றும் தூதரகத்தின் தூதுக்குழுவினர் அண்மையில் டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட்டின் தலைமையகத்துக்கு விஜயம் செய்தனர்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி தொடர்பில் டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட்டின் உப தலைவர் ஜியா சியாஹுய், டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட்டின் சர்வதேச வர்த்தகத்திற்கான பிரதி பொது முகாமையாளர் மற்றும் டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட்டின் பிரதிநிதிகளுடன் தூதுவர் கொஹொன கலந்துரையாடினார்.

டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட் என்பது உலகளாவிய எரிசக்தித் துறைக்கான முறையான தீர்வுகளை வழங்குவதுடன், இது உலகின் சிறந்த 500 இயந்திர உற்பத்தியாளர்களில் 228ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அதன் நோக்கம் ஆற்றல் பரிமாற்றம், மின்மாற்றிகள், புதிய பொலிசிலிக்கன் பொருட்கள், அலுமினியம், மின்னணுவியல், சூரிய ஒளிமின்னழுத்த மற்றும் காற்றாலை சக்தி அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இக்கலந்துரையாடலின்போது தூதுவர் கலாநிதி பாலித கொஹொன, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில் அதிக முதலீடுகளை இலங்கை எதிர்பார்த்துள்ளதாகவும், டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட் போன்ற முதலீட்டாளர்கள் வரவேற்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

பசுமை ஆற்றல் என்பது மனிதகுலம் மற்றும் கிரகத்தின் எதிர்காலம் என்றும் தற்போதைய அரசாங்கத்தின் நாட்டைக் கட்டியெழுப்பும் செழிப்பான பார்வை கொள்கை கட்டமைப்பின்படி, 2030ஆம் ஆண்டளவில் 70 வீத எரிசக்தியை புதுப்பிக்கத்தக்க பொருட்களிலிருந்து உற்பத்தி செய்ய இலங்கை முயற்சிப்பதாகவும், மேலும் முதலீட்டு வாய்ப்புகளைத் திறக்கும் என்றும் அவர் கூறினார். இலங்கைக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தீர்வுகளை வழங்க டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட் தயாராக இருப்பதாக பிரதி பொது முகாமையாளர் வங்யன்கங்க் உறுதியளித்தார்.

இலங்கையில் சிலிக்கன் மற்றும் கிரஃபைட் உட்பட ஏனைய இயற்கை வளங்களில் முதலீடு செய்வதற்காக டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட்டை தூதுவர் ஊக்குவித்தார்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து டெபியன் எலெக்ட்ரிக் அப்பேரடஸ் கோ. லிமிடெட்டின் முக்கிய சேவைகள் மற்றும் சாதனைகளைக் காண்பிக்கும் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

# பால்நிலை சமத்துவம் - சமூக உள்ளடக்கப் பிரிவு சபாநாயகர் தலைமையில் அங்குரார்ப்பணம்





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கப் பிரிவு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (08) நாடாளுமன்றத்தில் திறந்துவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் நூலகத்தில் நிறுவப்பட்டுள்ள பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கப் பிரிவு, நாடாளுமன்ற வரலாற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் உட்பட பல புத்தகங்கள் மற்றும் பெண்கள் ஆய்வுகள் பற்றிய ஆவணங்களையும் கொண்டுள்ளது.

பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவை நம் நாட்டில் நீண்டகாலமாக உணரப்பட்டுவரும் விடயங்கள் விடயங்கள் என்றும், இந்நாட்டில் பெண்களை வழிநடத்துவதில் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் பெரும் முயற்சியை எடுக்க முடியும் என்றும் இங்கு கலந்துகொண்ட சபாநாயகர் தெரிவித்தார்.

ஐக்கிய அமெரிக்க சர்வதேச உதவித் திட்டத்தின் (யூஎஸ்எயிட்) இலங்கைக்கான பணிப்பாளர் ரீட்.ஜே.ஏஷ்லிமன் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் நன்றி தெரிவித்தார்.

சபாநாயகரின் உரையைத் தொடர்ந்து நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயும் கருத்து தெரிவித்தார்.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் சாதனைகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர எடுத்துரைத்தார்.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், சபை முதல்வரும் அமைச்சருமான கௌரவ. தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, நாடாளுமன்ற செயலகப் பணியாளர்கள், யூஎஸ்எய்ட்டின் இலங்கைக்கான பணிப்பாளர் மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பிணக்கு பற்றிய முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள புதிய முறை!

## மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் அறிமுகம்





இலங்கையின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவானது நீதியமைச்சுடன் இணைந்து பொதுமக்களுக்கான பிணக்கு பற்றிய முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் வசதியான முறையை பிரதேச செயலக மட்டத்தில் மத்தியஸ்த சபை முறைப்பாடு பெட்டியை அறிமுகம் செய்வதன் மூலமாக தொடங்கிவைத்துள்ளது. இது சனசமூக மத்தியஸ்த சபைகள் தலைவரின் அதிகாரங்களை விரிவுபடுத்தி CMDக்களுக்கு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெறுவதை எளிதாக்குகிறது.

முதல் பெட்டிகளை ஒப்படைக்கும் நிகழ்வு பல சிறப்பு அதிதிகளின் தலைமையில் நடைபெற்றது. நீதி அமைச்சர் அலி சப்ரி, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் பிரதித் தலைவர் தோர்ஸ்டன் பார்க்ப்ரீட், பிரிட்டிஷ் கவுன்சில் இலங்கைப் பணிப்பாளர் திருமதி மரியா ரெஹ்மான் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

பிணக்கு பற்றிய முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கான தற்போதைய முறையின் கீழ், பிணக்குக்குரிய பகுதியில் உள்ள சனசமூக மத்தியஸ்த சபையின் குறித்த அதிகாரியிடம் பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளை முறையான கடிதத்தின் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மத்தியஸ்த சபையானது பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கும்படியாக அதிக நேரத்தை எடுத்துக்கொள்வதாகத் தோன்றியது.

இதற்கான ஒரு தீர்வாக, வசதியான பிணக்கு ஏற்றுக்கொள்ளும் முறையை செயல்படுத்த மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு முடிவு செய்தது. பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் எனும் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசியா நிலையம், 350 மத்தியஸ்த சபை முறைப்பாடு பெட்டிகளை வடிவமைத்து தயாரித்து 25 மாவட்ட செயலகங்களுக்கு விநியோகம் செய்வதை மேற்பார்வையிட ஒரு சேவை வழங்குனருடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

SEDR என்பது ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்பட்ட ஆசியா நிலையத்துடன் இணைந்து பிரிட்டிஷ் கவுன்சிலால் செயல்படுத்தப்படும் நான்கு ஆண்டு நீதி அணுகல் திட்டமாகும். இந்த யூரோ 7 மில்லியன் மதிப்புள்ள திட்டமானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான STRIDE எனும் பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் பிரதித் தலைவர் தோர்ஸ்டன் பார்க்ப்ரீட், "உள்ளூர் பிணக்குககளைத் தீர்ப்பது உள்ளூராட்சியின் ஒரு முக்கிய அங்கமாகும். அதேபோன்று பிணக்குகளைத் திறம்பட ஏற்றுக்கொள்வது தொடர்பான அனைத்து தடைகளையும் நீக்குவதற்கு நாங்கள் பணியாற்றுவது மிகவும் முக்கியமானதாகும்.

மத்தியஸ்த சபை முறைப்பாடு பெட்டியானது பொதுமக்கள் தங்கள் குறைகளை சமர்ப்பிக்க எளிதான ஒரு வழியாகும், மேலும் சமூகத்தில் அதிகமான மக்கள் தங்கள் குறைகளை முன்வைக்க ஊக்குவிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இது இறுதியில் சமூக நீதியின் மீதான நம்பிக்கையை மற்றும் துணிவார்வத்தை அதிகரிக்க வழிவகுக்கிறது. SEDR திட்டத்திற்கான ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியானது, இலங்கையில் சமூக உரையாடலை மேம்படுத்துவதற்கும் உள்ளூர் அரசாங்கத்திற்கு உதவுவதற்குமான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும்" - என குறிப்பிட்டார்.

# எரிபொருள் களஞ்சிய முனையத்தின் புதிய தலைவராக மேஜர் ஜெனரல் சொய்சா நியமனம்

இலங்கை எரிபொருள் களஞ்சிய முனையத்தின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம்.ஆர்.டபிள்யூ. த சொய்சா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் காணி அபிவிருத்தி தொடர்பான கூட்டுத்தானத்தின் தலைவராக கடமையாற்றியுள்ளார்.



நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எரிசக்தி அமைச்சிலிருந்து விலகியதைத் தொடர்ந்து இலங்கை எரிபொருள் களஞ்சிய முனையத்தின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர் ஆகியோர் தமது பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







**சர்வதேச மகளிர் தினத்தையொட்டி இலங்கைக்கான குழு, தெற்காசிய அவுஸ்திரேலியா கூட்டமைப்பு மற்றும் அவுஸ்திரேலியா இலங்கை வர்த்தக சபை ஆகியவற்றுடன் இணைந்து மெல்பேர்னிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை பற்றிக் புகைப்படப்பிடிப்பு விழா நேற்று முன்தினம் (08)இடம்பெற்றது.**

# உணவக தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு நெருக்கடி

(ரஸீன் ரஸ்மின்)

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக புத்தளம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பல உணவகங்கள் மூடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் கடந்த சில வாரங்களாக எரிபொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில், தற்போது சமையல் எரிவாயு, கோதுமை மா என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

பாலாவி - புத்தளம் பிரதான வீதி, புத்தளம் - மன்னார் வீதி, புத்தளம் - குருநாகல் வீதி, புத்தளம் - அநுராதபுர வீதி, பாலாவி - கற்பிட்டி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள பல உணவகங்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் இழுத்து மூடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் உள்ளூர் மக்களும், புத்தளம் ஊடாக வடபகுதிகளுக்கு செல்லும் வாகனச் சாரதிகளும் பொதுமக்களும் உணவுத் தேவைகளை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.




புத்தளம் மாவட்டத்தில் சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களில் 'சமையல் எரிவாயு இல்லை' என்கின்ற பதாகைகளே தொங்கவிடப்பட்டுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சமையல் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக முடிந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களை எடுத்துக்கொண்டு புத்தளம் முதல் நீர்கொழும்பு வரை சென்றும் இறுதியில் சமையல் எரிவாயு இன்றி ஏமாற்றத்துடனேயே திரும்பிச் செல்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, புத்தளம் பகுதிகளுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்ற மதுரங்குளி 10ஆம் கட்டை பகுதியிலுள்ள மொத்த விற்பனை நிலையத்தில் 2.3 கிலோகிராம் மற்றும் 5.0 கிலோகிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரம் விநியோகிக்கப்படுவதாகவும் ஹோட்டல் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தமது ஹோட்டல் தேவைகளுக்கு போதுமானதாக இல்லை எனவும் 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர்களே தமக்கு தேவைப்படுவதாகவும் குறிப்பிட்ட ஹோட்டல் உரிமையாளர்கள் இதனாலேயே உணவகங்களை இழுத்து மூடும் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, புத்தளம் பகுதிகளில் உணவகங்கள் இவ்வாறு காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதால் குறித்த உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஹம்பாந்தோட்டை வைத்தியர்களுக்கும் பிரதமருக்கும் இடையில் சந்திப்பு







ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியர்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் தங்காலை தனியார் ஹோட்டலொன்றில் இடம்பெற்றது.

இதன்போது ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் குறித்து வைத்தியர்கள் பிரதமருக்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

தங்காலை வைத்தியசாலையை மத்திய அரசுக்கு கையகப்படுத்தும் நடவடிக்கையை முறையான மற்றும் விரைவான வேலைத் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்துவது குறித்து இதன்போது பிரதமர் கவனம் செலுத்தினார்.

குறித்த சந்திப்பில் அமைச்சர் சமல் ராஜபக்ஷ, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தீபிகா படபெந்திகே மற்றும் வைத்தியசாலை அதிகாரிகள், விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தடுப்பூசிகளை செலுத்திக்கொண்ட சுற்றுலாப்பயணிகள் பீ.சி.ஆர். பரிசோதனை செய்யவேண்டிய கட்டாயமில்ல

## மாலைதீவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

இலங்கைக்கு பிரயாணம் மேற்கொள்பவர்களுக்கான கட்டாய பீ.சி.ஆர். பரிசோதனைகளை நீக்குவதற்கான வசதி குறித்து மாலைதீவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஏ.எம்.ஜே.சாதிக் எடுத்துரைத்துள்ளார்.



இலங்கையின் முன்னணி பயண நிறுவனமான 'டிரவலர் குளோபல்' 2022 மார்ச் மாதம் முதலாம் திகதி மாலேயில் மீண்டும் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கைத் தூதுவர், முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்ட பிரயாணிகள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் பீ.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாய தேவைப்பாட்டை அரசாங்கம் உடனடியாக அமலுக்கு வரும்வகையில் கைவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையை தமது இரண்டாவது தாயகமாகக் கருதும் மாலைதீவு மக்கள் இலகுவாகவும் வசதிகளுடனும் இலங்கைக்கு பயணிப்பதற்கு இந்த நடவடிக்கை பெரிதும் உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். மாலேயிலிருந்து கொழும்புக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறையும் மற்றும் குறிப்பிட்ட தினங்களில் மூன்று விமானங்களையும் இயக்குகின்ற ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு உறுதுணையாகச் செயற்படலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

டிரவலர் குளோபல் அலுவலகத்தை மீண்டும் திறக்கும் நிகழ்வில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இலங்கை மற்றும் இந்து சமுத்திரப் பிராந்திய முகாமையாளர் ஜயந்த அபேசிங்க, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் நாட்டு முகாமையாளர் பௌஸான் பரீட், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌசர் பௌசி மற்றும் நிறுவனத்தின் மாலைதீவு அனுசரணையாளரும் டொனாட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான யாமீன் ஆடம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாலைதீவின் முன்னணி விமான நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் பயண முகவர்களும் கலந்துகொண்டனர். பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் மற்றும் டிரவலர் குளோபல் வழங்கும் சிறந்த சேவை மற்றும் வசதிகள் ஆகியவற்றினூடாக மாலைதீவு மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பல வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கைக்கு பயணம் செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கிரிபத்கொடவில் பாழடைந்த வீட்டிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்பு

நான்கு தினங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரின் சடலம் கிரிபத்கொட, முதியன்சகே வத்த பிரதேசத்திலுள்ள பாலந்த வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டின் அயலவர்களால் நேற்று முன்தினம் (08) 119 என்ற அழைப்பு இலக்கத்துக்கு வழங்கிய தகவலுக்கமைய கிரிபத்கொட பொலிஸாரினால் இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் துவாயினால் மூடி வைக்கப்பட்டிருந்ததாகவும் அழுகிய நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

35 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்துடன், துஷ்பிரயோகம் செய்ததன் பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த பெண் உயிரிழந்திருந்த வீடு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக நபரொருவர் வருகை தந்துள்ளதாகவும், சி.சி.ரி.வி. கெமரா ஆதாரத்தைக்கொண்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை உயிரிழந்த பெண் அங்கொடை உளவியல் வைத்தியசாலையில் மருந்து எடுத்துள்ளதுடன் அதற்கான மருந்து சீட்டும் அந்த வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலம் தற்போது ராகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை தேடிக் கண்டுபிடிப்பதற்கான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பங்கதெனிய அலங்கார மீன்கள் வளர்ப்பு நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(ரஸீன் ரஸ்மின்)

சிலாபம், பங்கதெனியவில் இயங்கிவரும் கொடுவா மீன் மற்றும் அலங்கார மீன்களுக்கான இனப்பெருக்க நிலையத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை மேற்படி கொடுவா மீன் மற்றும் அலங்கார மீன்களுக்கான இனப்பெருக்க நிலையத்தினை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், மேற்படி இனப்பெருக்க நிலையத்தின் உற்பத்திகளை அதிகரித்து, நாட்டின் அனைத்து பாகங்களுக்குமான கொடுவா மற்றும் அலங்கார மீன் குஞ்சுகளை விநியோகிப்பது தொடர்பாக தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபையின் (நெக்டா) அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

அத்துடன், கொடுவா மற்றும் அலங்கார மீன் வளர்ப்பின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் இதன்போது கேட்டறிந்துகொண்டார்.

# குற்றம் தவிர்

Police Roundup

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது கொம்பனித்தெரு

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவில் கடந்த 07ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 232 கிராம் கொக்கேய்ன் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், சந்தேகநபரினால் முன்னெடுக்கப்பட்ட கொக்கேய்ன் போதைப்பொருள் வியாபாரத்துக்கு உதவி வழங்கிய மேலுமொரு சந்தேகநபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவை மற்றும் மடபான ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 36 மற்றும் 33 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று (08) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் 07 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

### கொலைச் சம்பவம் - களுத்துறை

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற மோதலின்போது நபரொருவரால் இன்னுமொரு நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐ.டி.எச். வீதி, நாகொட என்ற முகவரியைச் சேர்ந்த 72 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்றுள்ளதுடன், சடலம் நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர், சந்தேகநபரின் மனைவியின் தந்தை என்பதுடன், இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் 32 வயதுடைய நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். களுத்துறை பொலிஸார் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### சபுகஸ்கந்த

சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தஹாம் மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் சபுகஸ்கந்த பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 12 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹெய்யன்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகொல தேவாலய வீதி பிரதேசத்தில் சபுகஸ்கந்த பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 17 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாகொல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சபுகஸ்கந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### எடேரமுல்ல

என்டேரமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அப்புகேவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் என்டேரமுல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 13 கிராம் 90 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உடதலவின்ன மற்றும் வத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், என்டேரமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மாலபே

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபுர பிரதேசத்தில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 12 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹோகந்தர தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த 29 மற்றும் 18 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீ.20 பிரதேசத்தில் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 07 கிராம் 390 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24 வயதுடைய தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கடவத்தை

கடவத்தை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவத்த அதிவேக நெடுஞ்சாலை பாலம் பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### பேலியாகொடை

பேலியாகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனவாசல பிரதேசத்தில் பேலியகொட பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பேலியாகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கோடாவுடன் ஒருவர் கைது பமுனுகம

பமுனுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துராஜவல பிரதேசத்தில் பமுனுகம பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (08) முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 3 ஆயிரத்து 900 லீற்றர் கோடாவுடன் (20 கோடா பீப்பாய்கள்) நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜா-எல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### போலி தங்க ஆபரணங்களை கொடுத்து நிதி மோசடி வரக்காபொல

போலியாக தயாரிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை பெற்றுக்கொடுத்து 20 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்த சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய நேற்று முன்தினம் வரக்காபொல பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் வரக்காபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாரியகொட பிரதேசத்தில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 731 கிராம் 240 மில்லிகிராம் போலி தங்கத் துண்டுகள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

அலவ்வ மற்றும் யக்கல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25 மற்றும் 38 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இதற்கு முன்னரும் இதுபோன்று நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் நிதி மோசடி செய்துள்ளதாகவும் கைதுசெய்யப்பட்ட இருவரில் ஒருவர் ரம்புக்கனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் உள்ளிட்ட 06 குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பாலமுனை முள்ளிமலை பிரதேச தனியார் காணியில் புத்தர் சிலையை நிறுவ முஸ்தீபு

## பிரதேசவாசிகளின் தலையீட்டால் முயற்சி தோல்வி







(மாளிகைக்காடு, திகாமடுல்ல நிருபர்கள்)

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை முள்ளிமலை பிரதேசத்திலுள்ள தனியார் காணியில் புராதன சின்னங்கள் உள்ள காணியென பொய்யான பரப்புரையை முன்வைத்து புத்தர் சிலையொன்றை நிறுவ பௌத்த பிக்குகளும், சிங்கள இளைஞர்கள் சிலரும் எடுத்த முயற்சியினால் நேற்று அந்தப் பிரதேசத்தில் பதற்றம் ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக அங்கு வருகைதந்த சிங்கள இளைஞர்கள் சிலர் சிலை நிறுவும் ஏற்பாடுகளை செய்துவந்ததாகவும் நேற்று (09) காணி பூஜை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தபோதே இந்த முரண்பாட்டு நிலை தோன்றியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

ஸ்தலத்திற்கு நேரடியாக வருகைதந்த முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.தவம், அட்டாளைசேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்ஸில், அட்டாளைசேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.அமானுல்லா, அட்டாளைசேனை பிரதேச சபை உறுப்பினர்கள், கிழக்கின் கேடயம் அமைப்பினர், பிரதேச மக்கள் பலரும் வெளியிட்ட எதிர்ப்பையடுத்து, அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரின் தலையீடுகளுடன் அரசாங்க அதிபரூடாக பிரச்சினையை தீர்க்க முடிவு செய்யப்பட்டதுடன், அங்கிருந்து எல்லோரும் வெளியேற்றப்பட்டு பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரின் தலையீடுகளுடன் அரசாங்க அதிபரூடாக பிரச்சினையை தீர்க்க முடிவுசெய்யப்பட்டதுடன், அங்கிருந்து எல்லோரும் வெளியேற்றப்பட்டு பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அம்பாறை மாவட்டத்தில் மின்வெட்டு வேளையில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் அச்சம்



## நெல் மூடைத் திருடியவர் பிரதேசவாசிகளால் மடக்கிப்பிடிப்பு

(மாவடிப்பள்ளி நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது மின்வெட்டு வேளையில் கள்வர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சம்மாந்துறை பிரதேசத்தில் விளினையடி சந்தியை அண்மித்த பிரதான வீதி சில்லறைக் கடை ஒன்றில் நேற்று முன்தினம் (08) திருட்டுச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதுடன், நிந்தவூரில் நெல் மூடைகளைத் திருடிய கள்வன் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியுள்ளது.

சில்லறைக் கடையொன்றில் இரவு 8 மணியளவில் நபரொருவர் 4 பக்கட் சிகரெட்டை கேட்டதாகவும் கடை உரிமையாளரான பெண் நான்கையும் ஒரு பேக்கில் இட்டு கையில் வைத்துக்கொண்டு, கணக்கை கூட்டும் வேளையில் குறித்த நபர் அவரது கையிலிருந்த பேக்கை பெண்ணிடமிருந்து பறித்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்மாந்துறை பகுதியில் மின்வெட்டு இடம்பெறும் வேளையில் இதுபோன்று கூடுதலான களவுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நிந்தவூர் 2ஆம் குறுக்கு வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து நெல் மூடைகளை திருடிய கள்வன் நேற்று (09) பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, நிந்தவூரில் ஒப்படைக்கப் பட்டான்.

இதேவேளை, கல்முனை சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களிலும் இவ்வாறான கோழி மற்றும் நெல்மூடை திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் மையவாடி தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடல்





(சர்ஜுன் லாபீர்)

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் மையவாடியில் மண் நிரப்பி புனரமைப்பு செய்வது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் நேற்று (09) திடீர் கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

இந்நேரடி கள விஜயத்தின்போது கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், கல்முனை முஹைத்தீன் பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.ஏ.அஸீஸ், உலமா சபைத் தலைவர் பீ.எம்.ஏ.ஜலீல் (பாகவி), கடற்கரைப் பள்ளி மையவாடி புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சீ ஸ்டார் விளையாட்டு கழகத்தினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கள விஜயத்தின் பின்னர் இது தொடர்பாக கல்முனை மாநகர சபையில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் குறுகிய காலத்திற்குள் இந்த மையவாடியினை புனரமைப்பு செய்து முடிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்தும், கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் மற்றும் பெரியபள்ளிவாசல் நிதியில் இருந்தும் பொதுநல அமைப்புகள் மூலமாக கிடைக்கப்பெறும் நிதிகளின் ஊடாகவும் உடனடியாக மையவாடியினை புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் இன்றே விடுவிப்பு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வுயர்மட்டக் கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.நிசார், ஏ.சி.ஏ சத்தார், கல்முனை பிரதேச செயலாளர், கல்முனை மாநகர பிரதி ஆணையாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# 3.51 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் திருமலையில் கணினி வள நிலையம் திறப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்திற்குரிய கணினி வள நிலையம் information teacnology distance learning hub ஆக வசதிகள் மேம்படுத்தப்பட்டு நேற்று (09) கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு. ஜி.திசாநாயக்கவினால் மீள திறந்துவைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் உட்பட அதிகாரிகள், மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இக்கணினி வள நிலையத்திற்காக 3.51 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

உயர்தரம் எழுதிய மாணவர்கள், பாடசாலைக் கல்வியை இடையிலே கைவிட்ட மாணவர்கள், இளைஞர், யுவதிகள், அரச உத்தியோகத்தரகள் போன்றோருக்கான தகவல் தொழில்நுட்பம் மற்றும் மொழித்துறைசார் பாடநெறிகளும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

## போடியார் புலம்பல்!



ஈஷ்டர் குண்டு வெடிப்புக்கு பின்னர்தான் பேராயர் மெல்கம் ரஞ்சித்துக்கும், காத்தான்குடி இஸ்லாமியர்களுக்கும் ஞானம் பொறந்துள்ளது! 2009இக்கு முன்னம் தமிழர்கள் பட்ட வேதன, வதை, துன்பம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தாக்கம் எல்லாம் இவர்களுக்கு தெரிந்தும் அது தமிழனுக்குத்தானே எண்டல்வா வேடிக்கை பார்த்தார்கள்.இப்ப தங்கட வாசல் படிய தட்டக்குளதான் முழிசிறாங்க."தனக்குத்தனக்கு வந்தாந்தாத்தான் சுளகு படக்கு படக்கு என்னுமாம்" எண்டு எங்கட பாட்டி சொன்ன பழமொழி. இவர்களுக்கும் பொருந்துது எலுவா..?

# ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் மட்டு. மாவட்ட முகாமையாளராக முகம்மது அரூஸ் நியமனம்



(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவில் எம்.கே.வீதி ஓட்டமாவடி 03இல் வசிக்கும் அப்துல் ஸலாம் முகம்மது அரூஸ் என்பவர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி தலைமைச் செயலாளரும், இலங்கை சுதந்திர மக்கள் கூட்டமைப்பு உப செயலாளரும், இலங்கை நாடாளுமன்ற அரச கொறடாவும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அசங்க நவரட்ணவினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளார்.

அப்துல் ஸலாம் முகம்மது அரூஸ் என்பவர் கடந்த காலங்களில் பல்வேறுபட்ட மும்மதமும் சார்ந்த நிகழ்வுகளை அரச அதிகாரிகளின் பங்குபற்றலுடன் முன்கொண்டு சென்றுள்ளார். பல அபிவிருத்திப் பணிகளையும் அரச மட்ட ஆதரவுடன் செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மனித உரிமைகள் சமாதான தூதுவர் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளராகவும் திறம்பட செயற்படுகிறார்.

# கிண்ணியா எழிலரங்கு மைதான புனரமைப்பு வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்துமாறு பணிப்பு

(கந்தளாய் நிருபர்)

## நகரசபைத் தலைவர் நிவாஸ்



திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா நகர சபைக்குட்பட்ட எழில் அரங்கு மைதானம், தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் (08) கிண்ணியா நகர சபைத் தலைவர் எம்.எம்.நிவாஸ் சென்று பார்வையிட்டார்.



நீண்ட நாட்களாக குறிப்பிட்ட இவ்வேலைத்திட்டம் முடிவுறுத்தப்படாமல் காணப்படுவதால் இப்பிரதேச இளைஞர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைப்பதாக தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டு களத்துக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு உடனடியாக இவ்வேலைத்திட்டத்தை நிறைவுசெய்து விளையாட்டு வீரர்களின் பாவனைக்கு வழங்குமாறு கிண்ணியா நகர சபைத் தலைவரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இதன்போது கிண்ணியா வட்டார உறுப்பினர் ஏ.எம்.மஹ்தி, உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஏ.நபீழ் மற்றும் நகரசபை உத்தியோகத்தர்கள் இதன்போது நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தில் முதலாவது தொலைக்கல்வி மத்திய நிலையம் திறப்பு







(கல்குடா நிருபர்)

ஜனாபதியின் ஆலோசனைக்கமைய கல்வி மறுசீரமைப்பு திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு அமைச்சின் புதிய கல்வி சீர்திருத்த முன்மொழிவினை அமுல்படுத்துவதற்கு இணைவாக தொலைக்கல்வி வலுவூட்டல் செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையம் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று (09) இடம்பெற்றது.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்தின் முதலாவது கற்கை நிலையம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஓட்டமாவடி பாத்திமா பாலிகா தேசிய பாடசாலை வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் ஜெய்யித் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி ஜே.எப்.றிப்கா, திருமதி ஜே.தாஜுன் நிசா, எம்.எச்.எம்.ரமீஸ், பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சரின் கிழக்கு மாகாண இணைப்புச் செயலாளர் கலாநிதி எம்.பி. முஸம்மில், வாழைச்சேனை பொலிஸ் உத்தியோகத்தர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக் கல்வி மத்திய நிலையத்திற்கு தனவந்தர் ஒருவரினால் அமைத்து தரப்பட்ட குடிநீர்த் திட்டம் திறந்துவைக்கப்பட்டதுடன், தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி செயற்றிட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பு திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு அமைச்சின் எட்டு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

பல்கலைக்கழகம் செல்லமுடியவில்லை என்ற கவலையை விடுத்து தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தின் மூலம் கல்வி பயிலும் மாணவர்களும் டிப்ளோமா பாடநெறியை பூர்த்திசெய்ய முடியும். இந்த சந்தர்ப்பத்தினை அனைத்து மாணவர்களும் பயன்படுத்தவேண்டும் என்று மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் ஜெய்யித் உமர் மௌலானா தெரிவித்தார்.

# ஓட்டமாவடி பிரதேச சபையில் முறையாக அகற்றப்படாத வீட்டுக் கழிவுகளால் சிரமம்

## வீதிகளில் போடப்பட்ட குப்பைகள் 4 நாட்களாக அப்புறப்படுத்தவில்லையென பொதுமக்கள் விசனம்





(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவில் அல்-அக்ஷா வீதியில் பொதுமக்களால் போடப்பட்ட கழிவுகள் பிரதேச சபையினால் கடந்த நான்கு நாட்களாக அகற்றப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஓட்டமாவடி மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து வாழைச்சேனைக்கு செல்லும் வீதியில் புகையிரதப் பாதையை கடந்தும் வலது பக்கம் முதலாவது வரும் வீதியே அல்-அக்ஷா வீதியாகும். அவ் வீதியின் ஆரம்பத்திலேயே புகையிரத வீதிக்கு அருகில் பிரதேச பொதுமக்கள் தங்களது வீட்டு கழிவுகளையும், வியாபாரிகள் தங்களது வர்த்தக நிலையங்களில் சேகரிக்கப்படும் கழிவுகளையும் அவ்விடத்தில் வீசவதனால் அப்பகுதியால் பிரயாணிக்கும் பிரயாணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்த் தள்ளப்படுகின்றனர்.

பிரதேசத்தில் பிரதேச சபையினால் நாளாந்தம் கழிவகளை அகற்றும் பணிகள் இடம்பெறுகின்ற போதிலும் இவ்விடத்தில் குவிக்கப்பட்டுள்ள மரக்கறி கழிவுகள், பொலிதீன், வீட்டுக்கழிவுகள் என்பன அகற்றப்படாமல் இருப்பதால் அப்பகுதியால் பயணிக்கும் பிரயாணிகளும் அவ்விடத்தில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீனை தொடர்புகொண்டு வினவியபோது, ஓட்டமாவடி பிரதேச சபையினால் நாளாந்தம் குப்பைகளை அகற்றும் பணிகள் சிறப்பாக இடம்பெறுவதோடு, உக்கக்கூடிய குப்பைகள் வேறாகவும் உக்காத குப்பைகள் வேறாகவும் வேறுபடுத்தி தருமாறு பதாகைகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒலிபெருக்கி மூலம் பிரதேசத்தில் அனைத்து வீதிகளிலும் அறிவிப்பு செய்யப் பட்டுள்ளோம்.

இருப்பினும் சிலரால் இவ்வாறு கழிவுகளை பிரதேசத்தில் வீதிகளில் போடுவதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள கழிவுகள் இரண்டு நாட்களுக்குள் துப்பரவு செய்யப் படுவதுடன், குறித்த பகுதிகளில் கழிவுகளை போடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மட்டு. பொதுச்சந்தையில் 12 கடைகள் சுகாதாரப் பரிசோதகர்களால் சுற்றிவளைப்பு

## மனித பாவனைக்குதவாத பெருமளவு மரக்கறிகள் மீட்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பொதுச் சந்தையில் சுகாதார அதிகாரிகள் நேற்று (09) மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது மனித பாவனைக்குதவாத பெருமளவு மரக்கறி வகைகள் கைப்பற்றப்பட்டதாக கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட தாதிய மாணவர்கள், மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 12 வர்த்தக நிலையங்கள் திடீரென சுற்றிவளைக்கப்பட்டன.

மூன்று மரக்கறி வர்த்தக நிலையங்களிலிருந்து மனித பாவனக்குதவாத 60 கிலோ மரக்கறி வகைகள் சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதுடன், குறித்த வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# நிந்தவூர் பிரதேச சபையின் சேவைகளை நவீனமயப்படுத்தும் திட்டம் அறிமுகம்



(மாளிகைக்காடு நிருபர்)

நவீன தொழில்நுட்பத்துறையில் பரிணாம வளர்ச்சி கண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பிரதேச சபையின் சேவைகளையும் நவீனமயப்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டமாக முகநூலினூடாக முறைப்பாடுகளைப் பெற்று விரைவாக தீர்வுகளை வழங்கும் திட்டம் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளரினால் நிந்தவூர் பிரதேச சபையின் அழைப்பு மையத்தில் நேற்று முன்தினம் (08) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் தெரு மின்விளக்கு திருத்தம், திண்மக்கழிவகற்றல், வடிகாலமைப்பு துப்பரவு போன்ற முக்கியமான அன்றாட முறைப்பாடுகளை Pradheshiya Sabah - Nintavur எனும் முகநூல் பக்கத்தின் முறைப்பாட்டுப் பிரிவில் பதிவுசெய்து உடன் தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பதிவுசெய்யப்படுகின்ற முறைப்பாடுகளை ஆவணப்படுத்தும் வகையில் உங்களிடம் கோரப்படுகின்ற தகவல்களை வழங்கி இலகுவாக தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே, இச்சேவையினை நிந்தவூர் பொதுமக்களாகிய நீங்கள் மிகவும் நாகரிகமான முறையில் பயன்படுத்தி பிரதேச சபையினூடான சேவையினை இலகுவாகப் பெற்றுக்கொள்வதுடன், இப்பிராந்தியத்தின் முன்மாதிரியான உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றாக நிந்தவூர் பிரதேச சபையை திகழ்ந்திடச்செய்ய முடியுமென தவிசாளர் எம்.ஏ.அஸ்ரப் தாஹீர் தெரிவித்தார்.

# கல்முனையில் போக்குவரத்து பொலிஸார் திடீர் சோதனை

## 50 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்தியத்தில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 50 பேருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த திடீர் சோதனை நடவடிக்கையானது நேற்று (09) காலைமுதல் மதியம்வரை கல்முனை நகரப்பகுதி, நற்பிட்டிமுனை பிரதான சந்தி, தாளவட்டுவான் சந்தி, பாண்டிருப்பு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இத்திடீர் சோதனை நடவடிக்கை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரி.எச்.எம்.லசந்த புத்திகவின் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் கல்முனை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி நிஹால் சிறிவர்தன தலைமையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார்சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு, தண்டப்பணம் விதிக்கப்பட்டு வீதி ஒழுங்குமுறை தொடர்பான ஆலோசனைகள் முகக்கவசம் அணியாது சென்றவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு பொலிஸாரினால் எச்சரிக்கை வழங்கப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கையானது கொரோனா அனர்த்தத்தினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பின்னர், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையின்படி கல்முனை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் முக்கிய சந்திகள், பிரதான வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

குறிப்பாக, இச்சோதனை நடவடிக்கையின்போது 50 பேருக்கு எதிராக மேற்கூறிய குற்றங்களுக்காக தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# நிறுத்திவைக்கப்பட்ட பஸ்ஸில் தண்ணீர் பவுசர் மோதி விபத்து




(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பஸ் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பயணிகள் பஸ்ஸில் தண்ணீர் பவுசர் வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று (09) காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை கந்தளாய் சாலைக்குச் சொந்த திருகோணமலை கொழும்பு செல்லும் பயணிகள் பஸ்ஸிற்கு கந்தளாய் பிரதேச சபைக்குச் சொந்தமான தண்ணீர் ஏற்றும் பவுசர் வாகனமொன்றே இவ்வாறு பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பயணிகள் யாருக்கும் காயங்கள் ஏற்படாதபோதிலும், தண்ணீர் பவுசர் வாகனத்தின் சாரதிக்கு வாய் உடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். தண்ணீர் பவுசர் வாகனத்தின் சாரதி தூக்கத்தினால் சென்று மோதியுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு சிறுபிள்ளை வைத்திய நிபுணர் நியமனம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவிப்பு



(பொத்துவில் நிருபர்)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தியில் மற்றுமோர் மைல்கல்லாக சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணரான டொக்டர் எஸ்.கமலதீபன் வாரத்தில் மூன்று தினங்கள் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தினை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் வழங்கியுள்ளார்.

குறித்த வைத்தியசாலையில் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டமை இதுவே முதற்றடவையாகும். இச்சந்தர்ப்பமானது இப்பிரதேச மக்களுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். இதனால் இங்குள்ள மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனர். சிறுபிள்ளை வைத்திய நிபுணர் ஒருவர் திருக்கோவில் வைத்தியசாலைக்கு முதல் தடவையாக நியமிக்கப்பட்டதனையடுத்து, அப்பிரதேச மக்கள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நன்றி தெரிவிக்கின்றனர்.

# வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பெண் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு






(வெல்லாவெளி நிருபர்)

போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தின் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு விற்பனைக் கண்காட்சிக்கூடத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும், மகளிர் கௌரவிப்பு விழாவும் வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்றது.

இந்நிகழ்வு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி தலைமையில் ஒழுங்குசெய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை உளநல வைத்திய நிபுணர் டொக்டர் ஜெ.சகாய தர்சினியும், விசேட அதிதிகளான வன்னி கோப் நிறுவனத்தின் பணிப்பாளர்களான ரஞ்சன் - சிவஞானசுந்தரம், டொக்டர் மாலதி - வரனும் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.அருள்ராஜா, சப்போர்ட் நிறுவனத்தின் தலைவர் சிறிஸ்கமார், இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி பைரதி, செயற்றிட்ட உத்தியோகத்தர் ரமேஸ்குமார், மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இதன்போது வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் அர்ப்பணிப்புடன் கடமை யாற்றிய பெண்களுக்கு பொன்னாடைப் போர்த்தி நினைவுப்பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

# சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை அதாவுல்லாவால் நிறைவேற்ற முடியாது

## விமல் மற்றும் உதயவின் வெளியேற்றம் நிரூபிப்பு என்கிறார் யஹியாகான்

சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை வைத்து – நாடாளுமன்றத்துக்கு தெரிவான தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாவால் இனி அவ்வாறானதொரு சபையை பெற்றுத்தர முடியாது என்பது ஊர்ஜிதமாகிவிட்டதாக முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதிலுள்ள தனது அலுவலகத்தில் தமது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே யஹியாகான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2022 பெப்ரவரியில் சாய்ந்தமருது நகர சபை மலரும் என்று கூறி 9000 வாக்குகளை கபளீகரம் செய்த அதாவுல்லா - பொதுத் தேர்தலிலும் அம்மக்களின் வாக்குகளை பெற்றார். ஆனால், நகர சபை இதுவரை சாய்ந்தமருதுக்கு கிடைக்கவில்லை.

"நான் - ஜனாதிபதியின் சகபாடி என்று கூறிக்கொண்டே சாய்ந்தமருது மக்களை, இரண்டு தேர்தல்களில் ஏமாற்றினார். இப்போது - விமல் மற்றும் உதய கம்மன்பிலலவின் வெளியேற்றத்துடன் அதாவுல்லாவும் செல்லாக்காசாகிவிட்டார்.

கோட்டாபயவை - ஜனாதிபதி ஆசனத்தில் அமர்த்த பாடுபட்டவர்களே தூக்கி வீசப்பட்டிருக்கும் நிலையில், அதாவுல்லாவின் கோரிக்கை ஒருபோதும் நிறைவேறாது என்பது இங்கு சிறுபிள்ளைகூட அறியாத ஒன்றல்ல.

ஆக, அதாவுல்லா இன்னும் இன்னும் சாய்ந்தமருது மக்களை ஏமாற்றி அரசியல் நடத்த முனையாமல், சாய்ந்தமருது நகர சபை விடயத்தில் முழுமையாக ஒதுங்கிக்கொள்ள வேண்டும்.

அல்லது தனது வெற்றிக்கு பங்களிப்பு செய்த சாய்ந்தமருது மக்களின் 9000 வாக்குகளுக்காவது அதற்கு பரிகாரமாக தனது மிகுதி இரண்டரை வருட



கால எம்.பி. பதவியை சாய்ந்தமருது சலீமுக்கு வழங்கி நன்றி செலுத்த வேண்டும் அதாவுல்லா.

சாய்ந்தமருதைச் சேர்ந்த தே.கா. முக்கியஸ்தர் சலீமும் அதாவுல்லாவுடன் இணைந்து சாய்ந்தமருது நகர சபை கோஷத்தை முன்வைத்து வாக்குகளை பெற்று ஏமாற்றினார். ஆக , அதாவுல்லா தனது எம்.பி. பதவியை வழங்காவிட்டால், நண்பர் சலீமும் இதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து, அதாவுல்லாவுக்கும் சலீமுக்கும் இதுவொரு ஆரோக்கியமான செயற்பாடாக இருக்கமாட்டாது என்பதை விட சாய்ந்தமருது மக்களும் உங்கள் இருவர் மீதும் நம்பிக்கை இழந்து விட்டனர் என்பதை அந்த ஊரைச் சேர்ந்தவன் என்பதில் என்னால் உறுதியாக கூறமுடியும்.

அதாவுல்லாவினால் நகர சபையை பெற்றுத் தர முடியாது. அவருக்கு அரசாங்கத்தில் பலம் இல்லை என்பது வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டவுடனேயே அறிய முடிந்தது. இதனை பல தடவை நான் கூறியும் வந்துள்ளேன்.

சாய்ந்தமருது மக்கள் தமது நகரசபை விடயத்தில் இவர்களை இனியும் நம்பவும் கூடாது. அவர்களது பசப்பு வார்த்தைகளுக்கு இனியும் ஏமாறவும் கூடாது. அதேபோல், சாய்ந்தமருது பள்ளிவாசல் நிர்வாகமும் இனியும் பள்ளிவாசல் என்ற போர்வையில் மக்களை ஏமாற்ற முனையாது, பள்ளிவாசல் வேலைகளில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சாய்ந்தமருதுக்கு தனியான நகரசபை கிடைக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். இறைவனின் நாட்டப்படி அதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பேன். வெற்றியே கிட்டும் என்றும் யஹியாகான் தெரிவித்துள்ளார்.

# அட்டாளைச்சேனையில் வீதி விளக்குகளை அணைத்து மின்சாரத்தை சேமிக்கும் நடவடிக்கை

## பிரதேச சபைத் தவிசாளரின் பணிப்பில் ஆரம்பம்

(பாலமுனை நிருபர்)

நாட்டில் நிலவும் மின்சாரத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும்முகமாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், வீதி மின்விளக்குகளை அணைத்து மின்சாரத்தை சேமிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் செயற்றிட்டம் கடந்த திங்கட்கிழமை முதல் அட்டாளைச்சேனை பிரதேச சபைப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் வேண்டுகோளுக்கமைவாக, இத்திட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லாஹ்வின் பணிப்புரைக்கமைவாக இத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

இதன் அடிப்படையில் 2022.03.07ஆம் திகதி முதல் 2022.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் பிற்பகல் 6.00 மணி தொடக்கம் முற்பகல் 6.00 மணிவரை வீதி விளக்குகளை அணைத்து மின்சாரத்தை சேமிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் அப்பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 8.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அட்டாளைச்சேனை சந்தை அபிவிருத்தி





(அட்டாளைச்சேனை நிருபர்)

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை சந்தைக்கான கட்டிடத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

அட்டாளைச்சேனைப் பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வேலைத்திட்டத்தின் பெயர்ப் பலகையினை திரைநீக்கம் செய்துவைத்தார். இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் சாபீர், பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். எம்.ஜுனைதீன், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ் சுமார் 8.5 மில்லியன் ரூபா செலவில் அட்டாளைச்சேனை சந்தைக்கான கட்டிடத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் தினத்தில் போராட்டம் நடத்திய பெண்களை நேரில் சந்தித்து பேசிய கிழக்கு மாகாண ஆளுநர்





(கிண்ணியா நிருபர்)

யுத்தத்தின்போது காணாமல்போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் குழுவொன்று நேற்று முன்தினம்(08) காலை திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காணாமல்போன தமது குடும்ப உறுப்பினர்களின் இறப்புச் சான்றிதழ் பெறுவதில் உள்ள தடைகள் மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்திடம் பெண்கள் தெரிவித்தனர்.

சமூக அநீதியால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை ஆராய, ஆளுநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழுவிடம், பெண்கள் தங்கள் பிரச்சினைகளை தெரிவிக்கும்படி, ஆளுநர் இதன்போது கூறினார்.

அவ்வாறு சமர்ப்பித்த பின்னரே அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ஆளுநர் அலுவலகம் முன்பு வந்த பெண்களுக்கு ஆளுநர் இதன்போது குளிர்ப்பானம் வழங்கினார். சிறிது நேரத்தில் பெண்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## பெரியகல்லாறு ஆலய வண்ணக்கர் நிர்வாகத்தினரால் கௌரவிப்பு!

(கல்லடி நிருபர்)

பெரியகல்லாறு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர கொடியேற்றத்தின் போது ஆலயத்தின் வண்ணக்கர் கௌரவிக்கப் பட்டார்.

இவர் பல வருட காலம் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காகவும் கல்லாறு வரலாற்று நூலை எழுதி வெளியிட்டமைக்காகவும் ஏழடுக்கு இராஜகோபுரம் மற்றும் சித்திரத்தேர் அமைப்பதற்கு அடிகோலியதற்காகவும் ஆலய முன்னாள் வண்ணக்கரும், பிரசித்த நொத்தாரிசும், அதிபருமான மூ.மன்மதராஜா ஆலய நிர்வாகத்தின் சார்பில் அதன் தற்போதைய வண்ணக்கர் நே.கமல்ராஜினால் பொன்னாடை போர்த்தப்பட்டு, பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார். இதன்போது ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் பலரும் அவருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவமளித்தமை குறிப்பிடத்தக்கது.



## தென்கிழக்கு பல்கலையில் புத்தகக் கண்காட்சி






(மாளிகைக்காடு நிருபர்)

வாசிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்தில் இறுதியாண்டு மாணவர்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட புத்தகக் கண்காட்சி மற்றும் பிரபல அறிஞர்களின் நூல்கள் பற்றிய ஆய்வு நிகழ்வொன்று இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நூலகர் எம்.எம்.ரிபாயுடீன் தலைமையில் நேற்று முன்தினம் (08) மாலை நடைபெற்றது.

பல்கலைக்கழக நூலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டதுடன் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நூலக உயர் அதிகாரிகள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சி







(கல்லடி நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பெண்களினால் மேற்கொள்ளப் படும் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும், பொருட்களின் விற்பனையும் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (08) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கல்குடா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.ஏ.றிஸ்மியா பானு, கைத்தொழில் அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கீர்த்தனா சுதாகரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியில் தென்னைமர உற்பத்திப் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள் மற்றும் தையல் அலங்காரம் போன்றன காட்சிப்படுத்தப்பட்டதோடு, விற்பனையும் செய்யப்பட்டன.

# ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி இணைப்பு அதிகாரியாக டில்சாத் நியமனம்

(நாவிதன்வெளி, பொத்துவில், கல்முனை நிருபர்கள்)

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி, சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடியின் கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான இணைப்பு அதிகாரியாக கிழக்கு மாகாண பாரம்பரிய வைத்தியர்களின் சம்மேளன பொதுச் செயலாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியருமான ஏ.சி.டில்சாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனக் கடிதத்தை சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி, சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி சிறிர ஜயக்கொடி தனது அமைச்சில் வைத்து நேற்று முன்தினம் (08) வழங்கி வைத்தார்.



இவர் பல சமூக அமைப்புகளில் பல்வேறுபட்ட பதவிகளிலிருந்து சமூகத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கரடியனாறில் சட்டவிரோத மணல் அகழ்வு

## ஒருவர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள காரைக்காடு பகுதியில் பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் பெயரைக் கூறி சட்டவிரோதமாக நிலத்தை தோண்டி மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை கடந்த திங்கட்கிழமை (07) மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவினர் கைதுசெய்ததுடன், அகழ்ந்த மணலை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த இரு களஞ்சிய நிலையங்களில் இருந்து 48 கீப் மணலை மீட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள ஆற்றில் மணல் அகழ்வதற்கு சிலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், சிலர் அதனை மீறி அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளின் பெயரைப் பயன்படுத்தி இரவில் அந்த பகுதியிலுள்ள நிலத்தை கனரக வாகனம் கொண்டு தோண்டி மணலை அகழ்ந்து எடுத்துக்கொண்டு அருகிலுள்ள பகுதியில் களஞ்சியப்படுத்தி வந்துள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலையடுத்து பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் குறித்த மணல் களஞ்சியசாலைகளை முற்றுகையிட்டு, ஒருவரை கைதுசெய்ததுடன், ஒரு களஞ்சியசாலையில் 12 கீப்பும் அடுத்த களஞ்சியசாலையில் 36 கீப்பும் கொண்ட 48 கீப் மணலை மீட்டு, அங்கிருந்த கனரக வாகனங்களில் ஏற்றப்பட்டு கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இதன்போது கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருதில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு







(பொலிவேரியன் நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (08) சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முஆபிக்கா தலைமையில், கலாசார பிரிவு மற்றும் சிறுவர், மகளிர் அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் எம்.ஐ.எஸ். சபீனா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கல்முனை மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம். ஆயிஷா சித்தீக்கா, பிரதேச சபையின் கணக்காளர் நுஸ்ரத் பானூ, கவிதாயினி, கவிப்பேரரசி ரிஹானா அனார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். சமய அனுஷ்டானத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், கிராஅத் ஐ.எப்.அகிலா, மொழிபெயர்ப்பை எஸ்.பவாஸ் ரொஸ்னியும் வழங்கினர்.

உலகத்தில் உயிர் நீத்த பெண்மணிகளுக்காக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, வரவேற்புரையை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகா, தலைமையுரையை உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிக்கா, மகளிர் தின உரையை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.நஸ்லா ஆகியோரும் நிகழ்த்தினர். சுகைல் அஸீஸ், எல். ஜி.எம். மர்யம் ஆகியோர் கவிதை சொன்னதோடு, எம்.ஐ.சஜினாஸ் பாடலொன்றையும் பாடினார்.

இதன்போது நவீன சமூக வலைத்தளங்களினால் பெண்களுக்கு ஏற்படும் தாக்கம் நன்மையா? அல்லது தீமையா? என்ற தலைப்பில் விவாத மேடையொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் நன்மை என்ற அணியில் எல்.ஜி.எம்.மும்தாஜ் (தலைவர்), எம்.என்.எப்.சுமையா, ஏ.பி.தீசான், எம்.என்.எப்.எம்.சினாபி ஆகியோரும் தீமை என்ற அணியில் ஏ.ஆர்.எப்.சியானா (தலைவர்), ஏ.நபீலா, ஏ.சபானா, ஏ.எஸ்.எப்.சுமையா ஆகியோரும் பங்கேற்று காத்திரமான கருத்துகளை முன்வைத்தனர்.

இதில் சிறந்த முறையில் கருத்துகளை முன்வைத்த தீமை சார்பில் விவாதித்த அணியினர் வெற்றியை தனதாக்கிக் கொண்டனர். போட்டியின் நடுவர்களாக கல்முனை மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஆயிஷா சித்தீக்கா, கவிதாயினி ரிஹானா அனார் ஆகியோர் கடமையாற்றினர்.

சாய்ந்தமருதில் சிறந்த முறையில் பங்காற்றி, செயலாற்றிவரும் மகளிர் சங்கங்களின் தலைவிகள் மற்றும் சிறப்பாக சேவையாற்றிவரும் சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகா, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.பி.நஸ்லா, எம்.ஏ.சக்கீனா ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீல், கலாசார உத்தியோகத்தர் சுரேஷ் குமார், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அனைத்து பெண் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## உலக செய்திகள்

### கீவ்வில் வான்வழித் தாக்குதலுக்கான சைரன் எச்சரிக்கை



உறைய வைக்கும் - செல்சியஸ் கடும் குளிரையும் பொருட்படுத்தாது உயிரை காத்துக்கொள்ள அண்டைநாடுகளுக்கு படையெடுக்கும் உக்ரைனியர்கள்...

# அடுத்த 96 மணிநேரத்துள் தலைநகரை கைப்பற்ற திட்டம்

- இரண்டு வாரங்களாகியும் உக்ரைனை வெல்ல முடியாத ரஷ்யா
- செர்னியாக்கிவ்வில் இரவு பகலாக தொடரும் தாக்குதல்: அகற்றப்படாத சடலங்களை நாய்கள் இழுத்துச் செல்லும் அவலம்
- பழங்கால போர் தந்திரங்களை கையாளும் ரஷ்யா



உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா, இன்றுடன் 15 நாட்களாக தாக்குதல் நடத்தி வருகிறது. இத்தாக்குதலில் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன், 20 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துவரும் அவலம் தொடர்ந்து வருகிறது.

தலைநகர் கீவ் உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்யப் படைகள் தங்கள் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளன. உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்ய இராணுவம் பல பகுதிகளை கைப்பற்றி, முக்கிய நகரங்களில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

தலைநகர் கீவ் புறநகர்ப் பகுதிகள், கார்கிவ் உள்ளிட்ட நகரங்களில் குடியிருப்புக் கட்டடங்கள், அரசு கட்டடங்கள் அனைத்தும் குண்டுவீச்சில் தரைமட்டமாகியுள்ளன. 14ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்து தாக்குதல் நடந்ததால், மெட்ரோ ரயில் நிலையங்கள், பதுங்கு குழிகளில் பதுங்கியுள்ள மக்கள் உணவு, தண்ணீர், மருந்து கிடைக்காமல் தவிப்புக்காளாகியுள்ளனர்.

தலைநகர் கீவ்வில், வான்வழித் தாக்குதலுக்கான சைரன் எச்சரிக்கை ஒலிக்க விடப்பட்டுள்ளது. உக்ரைன் இராணுவ விமானங்கள் மூலமாகவும் ரஷ்யத் தாக்குதலுக்கான எச்சரிக்கை விடப்பட்டதால் அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், உக்ரைனில் மோதல் இடம்பெற்றுவரும் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறுவதற்காக தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதையடுத்து ஆயிரக்கணக்கானோர் கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றனர்.

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா நடத்திவரும் இராணுவ நடவடிக்கை 15ஆவது நாளை எட்டியுள்ளது.

**4ஆம் கட்ட சமாதானப் பேச்சு இன்று**

இரு நாடுகளுக்கிடையே இன்று நான்காம் கட்ட சமாதானப் பேச்சு துருக்கியில் இடம்பெறவுள்ளது.

ஏலவே நடைபெற்ற 2ஆவது மற்றும் 3ஆவது கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது, போர் காரணமாக பொதுமக்கள் வெளியேறும் வகையில் மனிதாபிமான வழித்தடம் அமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

**தற்காலிக போர்நிறுத்தம்**

இதையடுத்து, உக்ரைன் தலைநகர் Kyiv, Chernihiv, Sumy, Kharkiv and Mariupol ஆகிய 5 நகரங்களில் தற்காலிக போரை நிறுத்துவதாக ரஷ்யா அறிவித்தது. இதையடுத்து போர் நடைபெற்றுவரும் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றனர்.





உக்ரைன் அப்பாவி மக்களை பணயக்கைதிகளாக பிடித்துவைத்துள்ளதாக ரஷ்யாவும், மக்களை வெளியேற விடாமல் ரஷ்யா தொடர்ந்து குண்டுமழை பொழிவதாகவும் இருதரப்பினரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

மக்கள் மனிதாபிமான வழித்தடத்தில் நீண்ட வரிசையில் வெளியேறத் தொடங்கியதால் நகரங்கள் வெறிச்சோடி காட்சியளிக்கின்றன. இரண்டாவது நாளான நேற்றும் மக்கள் வெளியேறக் காத்திருக்கின்றனர்.

**அகதிகளாக 20 இலட்சம் பேர்**

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் போர் காரணமாக 20 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வெளியேறிவிட்டதாகவும், அண்டை நாடுகளில் அவர்கள் தஞ்சம் புகுந்திருப்பதாகவும் அகதிகளுக்கான ஐ.நா. முகமை அறிவித்துள்ளது.

இதில் அதிகபட்சமாக 12 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அண்டைநாடான போலந்தில் தஞ்சமடைந்துள்ளனர். பிற ஐரோப்பிய நாடுகளில் 1.83 இலட்சம் பேரும், ஹங்கேரியில் 1.91 இலட்சம் பேரும், சுலோவாகியாவில் 1.41 இலட்சம் பேரும், மோல்டோவாவில் 83 ஆயிரம் பேரும், ருமேனியாவில் 82 ஆயிரம் பேரும் தஞ்சமடைந்துள்ளனர். போரை தொடுத்துள்ள ரஷ்யாவில் 99 ஆயிரம் பேரும், பெலராஸில் 450 பேரும் அகதிகளாக தஞ்சமடைந்திருப்பதாக ஐ.நா. புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. உக்ரைனை விட்டு வெளியேறியவர்களில் 90 சதவீதம் பேர் பெண்களும், குழந்தைகளும் என்பது குறிப்பிடத்தக்கது.





**இரண்டு வாரங்களாகியும் உக்ரைனை வெல்ல முடியாத ரஷ்யா**

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்ய இராணுவம் பல பகுதிகளை கைப்பற்றி, முக்கிய நகரங்களில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் கீவ் புறநகர்ப் பகுதிகள், கார்கிவ் உள்ளிட்ட நகரங்களில் குடியிருப்பு கட்டடங்கள், அரச கட்டடங்கள் அனைத்தும் குண்டுவீச்சில் தரைமட்டமாகியுள்ளன.

6 இலட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவும், 4.1 கோடி மக்கள் தொகையும் உக்ரைனின் இராணுவத்தில் 2.45 இலட்சம் முழுநேர வீரர்களும், 2.20 இலட்சம் ரிசர்வ் வீரர்களும் உள்ளனர்.



இந்நிலையில், 1.9 இலட்சம் வீரர்களை ரஷ்ய இராணுவப் படைப் பிரிவு உக்ரைனை 3 திசைகளிலிருந்தும் கடந்த பெப்ரவரி 24ஆம் திகதிமுதல் இன்றுடன் 2 வாரங்களாக படையெடுத்து வருகிறது.

**இராணுவத் தளபதிகள் இருவர் பலி**

மார்ச் முதல் வாரத்தில் ரஷ்ய இராணுவப் படைவீரரின் துணை தளபதி மேஜர் ஆன்ட்ரி சுகோவெட்ஸ்கி போரில் உயிரிழந்ததாக வெளியான தகவல்களை ரஷ்ய ஊடகங்கள் உறுதிசெய்தன.

இந்நிலையில், கார்கிவ் நகர் அருகே நடந்த தாக்குதலில் ரஷ்யாவின் 41ஆவது படைப்பிரிவின் துணை காமண்டோவான மேஜர் ஜெனரல் விட்டலி ஜெராசிமோவ் உயிரிழந்ததாக உக்ரைன் இராணுவ அமைச்சின் உளவுப்பிரிவு தலைமை இயக்குநர் தகவல் வெளியிட்டுள்ளார்.

உயிரிழந்த விட்டலி 2ஆவது செசன்யா, சிரியா மீதான ரஷ்யாவின் போரில் பெரும் பங்காற்றியவர். உக்ரைனிடமிருந்து கிரிமியா பகுதியை மீட்டதற்காக ரஷ்யா இராணுவத்தின் உயர் விருதை பெற்றவர்.

15ஆம் பக்கம் பார்க்க...

**போர்த் தொடங்கி 13 நாட்களை எட்டியிருந்த நிலையில் 20இலட்சம் பேர் உக்ரைனிலிருந்து வெளியேறியுள்ளனர்**



# ரஷ்யாவை பயங்கரவாத நாடாக அறிவிக்குமாறு உக்ரைன் வலியுறுத்து



ரஷ்யாவை பயங்கரவாத நாடாக அறிவிக்குமாறு உக்ரைன் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளின் அழுத்தத்தை அதிகரித்து அந்நாட்டை பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும் எனவும், உக்ரைனிய மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ரஷ்யப் படைகளை ஆகாயம், கடல், தரை என மூன்று வழிகளிலும் உக்ரைன் இராணுவம் எதிர்கொண்டு வருவதாக கூறிய ஸெலென்ஸ்கி, தங்கள் வான்பரப்பை விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதி என அறிவித்து, உக்ரைன் வான்பரப்பு பாதுகாப்பானது என்பதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

உக்ரைன் ஜனாதிபதியின் உரையை பாராட்டிய பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன், உக்ரைனுக்கு ஆயுத உதவிகள் உட்பட அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

## "நேட்டோவில் சேர வலியுறுத்த மாட்டோம்"



## புட்டினுடன் பேச்சுக்குத் தயார் - என்கிறார் ஸெலென்ஸ்கி

"நேட்டோ அமைப்பில் உறுப்பினராக சேர்த்துக்கொள்ள உக்ரைன் இனிமேல் வலியுறுத்தாது" என தெரிவித்துள்ள அந்நாட்டு ஜனாதிபதி வெலோடிமிர் ஸெலென்ஸ்கி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என அறிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் விரும்பியதாலேயே அந்நாடு மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இன்று 15ஆவது நாட்களாக தாக்குதல் நீடித்துவரும் நிலையில், போரை முடிவுக்குக் கொண்டுவர இரு நாடுகளும் நடத்திய மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்நிலையில், "நேட்டோவில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளுமாறு இனி வலியுறுத்தப்போவதில்லை" என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பலமுறை வேண்டுகோள் விடுத்த நிலையிலும், உக்ரைனை நேட்டோவில் இணைத்துக்கொள்ள அந்த அமைப்பிலுள்ள நாடுகள் முனைப்பு காட்டாததால் எனது மனநிலை மாறிவிட்டது. அதனால், இனிமேல், உக்ரைனை நேட்டோ அமைப்பில் சேர்த்துக்கொள்ளும்படி வற்புறுத்த மாட்டோம். இனி யாரிடமும் தானம் பெறப்போவதில்லை - என்றார்.

மேலும், ரஷ்யாவுடனான போர் காரணமாக, உக்ரைனை தங்களது அமைப்பில் இணைத்துக்கொள்ள நேட்டோ அஞ்சுகிறது.

தன்னாட்சி பெற்றதாக அறிவிக்கப்பட்ட டோனஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகள் குறித்து ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் சமரசத்தில் ஈடுபட விரும்புவதாக ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.

மேலும், இந்த இரு பகுதிகளை ரஷ்யாவை தவிர, வேறெந்த நாடுகளும் தன்னாட்சி பெற்றதாக அங்கீகரிக்கவில்ல எனவும் உக்ரைனின் ஒரு பகுதியாக இருக்கும் மக்கள் தனி நாடாக எப்படி வாழ முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ட்விட்டர் பக்கத்தில் "உக்ரைன் ஒருபோதும் புட்டினின் வெற்றியாக இருக்காது. புட்டினால் உக்ரைனின் ஒரு நகரத்தை கைப்பற்ற முடியும். ஆனால் அவரால் ஒருபோதும் ஒரு நாடாக உக்ரைனை பிடிக்க முடியாது."

- இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

### ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை இரத்துசெய்தது அமெரிக்கா

## சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை பீப்பாயொன்றுக்கு 140 டொலராக உயர்வு

உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யாவிடமிருந்து பெற்றோல், எரிவாயு இறக்குமதியை தடை செய்வதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையின் ரூஸ்வெல்ட் அறையிலிருந்து பேசிய ஜோ பைடன், ரஷ்யாவிலிருந்து வரும் அனைத்து பெற்றோலிய எரிவாயு இறக்குமதிகளுக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். இந்த முடிவுக்கு பல்வேறு ஐரோப்பிய கூட்டு நாடுகள் ஆதரவு அளிக்க முடியாத சூழல் இருப்பதை தாம் புரிந்து கொண்டிருப்பதாகவும் ஜோ பைடன் தெரிவித்தார்.

வரலாற்றில் இல்லாத கடினமான பொருளாதாரத் தடைகளை ரஷ்யா மீது விதித்து வருவதாகவும், இந்த அறிவிப்பு ரஷ்யாவுக்கு மிகப்பெரிய பொருளாதார மையத்தின் மீது தாக்குதல் தொடரப்பட்டிருப்பதாக ஜோ பைடன் தெரிவித்தார்.

உள்நாட்டில் பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வு, எதிர்க்கட்சியினர் எதிர்ப்பு போன்ற பிரச்சினைகள் சவால்கள் இடையிலும் இந்த முடிவை பைடன் அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தடை மூலம் ரஷ்யாவிலிருந்து வரும் எந்த எண்ணெய்க் கப்பலுக்கும் அமெரிக்கத் துறைமுகங்களில் அனுமதி கிடைக்காது என பைடன் தெரிவித்துள்ளார்.

**சர்வதேச சந்தையில் அதிகரிக்கும் மசகு எண்ணெய் விலை**

இந்நிலையில், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை வரலாறு காணாத அளவுக்கு உச்சத்தை எட்டியுள்ளது.




- **சமையல் எண்ணெய் - எரிவாயு - நிலக்கரி போன்றவற்றின் ஆதார விலைகளும் அதிகரிப்பு**
- **உற்பத்தியை அதிகரிக்குமாறு ஓபெக் நாடுகளுக்கு ஜேர்மனி அவசர வேண்டுகோள்**

கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத வகையில் மசகு எண்ணெயின் விலை ஒரு பீப்பாய்க்கு 140 டொலராக உயர்ந்துள்ளது.

உக்ரைன் -ரஷ்யா போர்ச்சூழல் காரணமாக மசகு எண்ணெய் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. தவிர, சமையல் எண்ணெய், எரிவாயு, நிலக்கரி போன்றவற்றுக்கான ஆதார விலையும் கடுமையாக உயர்ந்துள்ளன.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதியை சார்ந்து நிற்கும் நிலையுள்ளது. இதனால் உள்நாட்டில் விலை அதிகரிக்கக்கூடும் என்று தகவல் வெளியாகியுள்ளது. கடந்த நான்கு மாதங்களாக பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை.

மாநில சட்டமன்றத் தேர்தல்கள் முடிவடைந்துவிட்ட நிலையில், பெற்றோல், டீசல் லீற்றருக்கு 6 ரூபா வரை விலை உயர்த்த எண்ணெய் நிறுவனங்கள் மத்திய அரசிடம் கோரி வருகின்றன. பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்ந்தால் பணவீக்கமும் அதிகமாகும் என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**ஜேர்மனி அவசர வேண்டுகோள்**

மசகு எண்ணெய் விலை உயர்வைத் தொடர்ந்து உற்பத்தியை அதிகரிக்க எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கு ஜேர்மனி அவசரமான வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து பேசிய ஜேர்மனியின் பொருளாதாரத் துறை அமைச்சர் ரொபார்ட் ஹாபெக், சந்தையில் நிவாரணத்தை உருவாக்குவதற்காக உற்பத்தியை அதிகரிக்க ஓபெக் எனப்படும் எண்ணெய் உற்பத்தி நாடுகளை கேட்டுக்கொண்டார். இதனால் எண்ணெய் மீதான அழுத்தத்தைக் குறைக்க பெரும் பங்களிப்பாக இருக்கும் என்றும் ஹாபெக் தெரிவித்தார்.

ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் பிரித்தானியா விதித்துள்ள தடையால் தற்போது ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 140 டொலருக்கு விற்பனையாகிறது. இந்நிலையில், எதிர்வரும் நாட்களில் இந்த விலை 300 டொலர் வரை உயரக்கூடும் என ரஷ்ய துணை பிரதமர் அலெக்சாண்டர் நோவக் தெரிவித்துள்ளார்.

## உலகிலேயே அதிக தடைகளைப் பெற்ற நாடாக ரஷ்யா

உக்ரைன் மீதான படையெடுப்பின் காரணமாக உலகிலேயே அதிக தடைகளைப் பெற்ற நாடாக ரஷ்யா உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து பொருளாதாரத் தடைகள் கண்காணிப்புத் தளமான கேஸ்டெலம் டொட் ஏஐ (Castellum.AI) வெளியிட்டுள்ள அறிவிப்பில், உக்ரைனின் டோனட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகியவற்றை தன்னாட்சி பிரதேசமாக புட்டின் அறிவித்த அடுத்த நாளில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் ரஷ்யா மீது முதன்முறையாக பொருளாதாரத் தடைகளை விதித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 24ஆம் திதியன்று உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை ரஷ்யா அறிவித்த பின்னர் பல பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து விதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி 22இற்கு முன் ரஷ்யாவிற்கு எதிராக நடைமுறையில் இருந்த தடைகள், படையெடுப்பிற்கு பின்னர் விதிக்கப்பட்ட தடைகள் என அந்நாட்டின் மீது மொத்தம் 5,532 தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சேவையை நிறுத்திய கோகோ கோலா - பெப்சி**

மெக்டொனால்ட், ஸ்டார்பக்ஸ், கோகோ கோலா, பெப்சி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் ரஷ்யாவில் தங்களது வணிகத்தை நிறுத்துவதாக அறிவித்துள்ளன.

உக்ரைனில் நடந்த சோகமான நிகழ்வுகளால் மக்களுடன் தங்கள் இதயமும் இணைந்திருப்பதாக கோகோ கோலா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேபோல் 60 ஆண்டுகளுக்கும் மேலாக ரஷ்யாவில் செயற்பட்டு வரும் பெப்சி, தங்களின் வணிகத்திற்கு மனிதாபிமானம் முக்கியமாக இருக்கவேண்டும் என்று தனது விற்பனையாளர்களுக்குத் தெரிவித்துள்ளது.

"அண்டை நாடுகளிலுள்ள உக்ரேனிய அகதிகளுக்குத் தேவையான பொருட்களை வழங்குவோம்" என பெப்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், பிரபல உணவு நிறுவனமான மெக்டொனால்ஸ் விடுத்துள்ள அறிக்கையில், உக்ரைனில் ஏற்பட்டுள்ள மனித துன்பங்களை பொறுத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளது.

மெக்டொனால்டு நிறுவனத்தின் ரஷ்ய கிளைகளில் மட்டும் 62 ஆயிரம் பேர் வேலை செய்து வருகின்றனர்.

ரஷ்ய மற்றும் உக்ரைனிய ஊழியர்களுக்கு தொடர்ந்து ஊதியம் வழங்கப்படும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. ரஷ்யாவில் முதலில் திறக்கப்பட்ட மேற்கத்தேய நிறுவனம் மெக்டொனால்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ரோலக்ஸ் வொட்ச் நிறுவனமும் ரஷ்யாவிற்கான தனது ஏற்றுமதியை நிறுத்துவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போலந்து நோக்கி கண்ணீரோடு அகதியாய் அழுதுகொண்டே சென்ற சிறுவன்

உக்ரைனிலிருந்து போலந்து எல்லையை நோக்கி கண்ணீருடன் அகதியாய் செல்லும் சிறுவனின் வீடியோ வெளியாகி அனைவரின் உள்ளத்தையும் உருக்கியுள்ளது.

போரில் உறவினர்களை இழந்தவர்கள் புகலிடம் தேடிச் செல்லும் காட்சிகள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. உக்ரைனிலிருந்து சுமார் 500 கி.மீ. தொலைவிலுள்ள போலந்தின் மெத்யாகா பகுதியை நோக்கி மக்கள் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கின்றனர்.



இந்நிலையில், உக்ரைனிலிருந்து போலந்துக்கு அகதியாக செல்லும் சிறுவன் ஒருவன் அழுதுகொண்டே யாருமில்லாமல் தன்னந்தனியாக நடந்து செல்லும் வீடியோ வெளியாகி அனைவரையும் கண்கலங்க வைத்துள்ளது.

மெடிஸ்கா கிராமத்தில் இந்த வீடியோ எடுக்கப்பட்டுள்ளது. எல்லையை கடந்து செல்லும் அந்தச் சிறுவன் அழுதுகொண்டே தனது பொருட்கள் அடங்கிய பையை போலந்துக்கு இழுத்துச் செல்கிறான்.

அவன் மட்டும் தனியாக செல்கிறான். அவனுடைய குடும்பத்தினர் எங்கே என்பது குறித்த தகவல் தெரியவில்லை. அந்தச் சிறுவன் தனியாகத்தான் உக்ரைனை விட்டு வெளியேறியுள்ளானா என்பது இன்னும் உறுதியாக தெரியவில்லை. எனினும், சிறுவன், தனது குடும்பத்தினரின்றி தனியாக அழுதுகொண்டே செல்கிறான். உக்ரைனில் நடக்கும் போரில் இதுவரை 38 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும், 71 குழந்தைகள் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டின் நாடாளுமன்ற மனித உரிமைகள் ஆணையர் தெரிவித்துள்ளார்.

## தந்தையை பிரிய மனமின்றி அடம்பிடித்து அழுத குழந்தை



பொலிஸ் அதிகாரியான தன் தந்தையை பிரிய மனமில்லாமல் அழுது அடம்பிடிக்கும் உக்ரைனிய குழந்தையின் வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

இர்பின் நகர் மீது ரஷ்ய இராணுவம் குண்டு மழை பொழிந்ததால் மக்கள் தங்கள் உடைமைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளுடன் அந்நகரை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

இரண்டு கைக்குழந்தைகளுடன் கிளம்பிய மனைவியை வழியனுப்பிய பொலிஸ் அதிகாரியை அவரது குழந்தை கட்டியணைத்து கதறியழுதது.

தந்தை கொடுத்த சொக்லெட்டை வாங்க மறுத்து, மழலை கைகளால் அவரின் தலைக்கவசத்தை அடித்து அடம்பிடித்த காட்சிகள் காண்போரை கண்கலங்க வைத்துள்ளன.

*14ஆம் பக்கத் தொடர்ச்சி...*

இதன்மூலம், ரஷ்யா தனது படையின் 2 முக்கிய அதிகாரிகளை இழந்துள்ளது. உக்ரைன் போரில் இதுவரை 11 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் இறந்துள்ளதாக உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ரஷ்யா தரப்பில் 500 பேர் மட்டும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு முக்கிய இராணுவத் தளபதிகளை இழந்தும் இதுவரை ரஷ்ய இராணுவத்தினால் உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை கைப்பற்ற முடியவில்லை. கார்கிவ், மைகோலைவ், செர்னிஹவ், சுமி மற்றும் ஒடேசா ஆகிய நகரங்களை முற்றுகையிட்டு கைப்பற்ற ரஷ்ய இராணுவம் போராடி வருகிறது.

**சடலங்களை இழுத்துச் செல்லும் நாய்கள்**

இந்நிலையில், தாக்குதல் குறித்து உக்ரைன் அதிகாரிகள் விவரிக்கையில்,

"கிழக்கு மற்றும் மத்திய உக்ரைனிலுள்ள நகரங்களில் ரஷ்ய போர் விமானங்கள் இரவில் குண்டுகளை வீசி தாக்குகின்றன. தலைநகர் கீவ்வின் புறநகர்ப் பகுதிகளில் குண்டுமழை பொழிகிறது. கீவ்வின் கிழக்கேயுள்ள சுமி, ஓக்டிர்காவில் குடியிருப்புக் கட்டடங்களும், மின் உற்பத்தி நிலையும் அழிக்கப்பட்டுள்ளன. இதில் பலர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

சைட்டோமிர், கீவ்வுக்கு மேற்கே அமைந்துள்ள செர்னியாக்கிவ் நகரத்திலுள்ள எண்ணெய்க் கிடங்கு மீதும் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இரவு - பகலாக கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்படுவதால், எங்களால் இறந்தவர்களின் உடல்களை சேகரிக்க முடியவில்லை. நகர வீதிகளில் சடலங்களை நாய்கள் இழுத்துச் செல்கின்றன" என வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

**அடுத்த 96 மணிநேரத்துள் தலைநகரை கைப்பற்ற திட்டம்**

அடுத்த 24 முதல் 96 மணிநேரத்தில் தலைநகர் கீவ் மீது கடும் தாக்குதல் நடத்த ரஷ்ய இராணுவம் திட்டமிட்டுள்ளதாக institute for water studies நிறுவனம் தெரிவித்துள்ளது.

போதுமான முன் திட்டமிடல் இல்லாததாலும் குறைந்தளவிலான இராணுவ படைப்பிரிவுகளை பல்வேறு முனைகளை நோக்கி அனுப்பியதாலும் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை ரஷ்யாவால் கைப்பற்ற முடியவில்லை என்று இந்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

**ரஷ்யாவின் பழங்கால போர் தந்திரம்**

உக்ரைன் அரசுடன் ஒருபுறம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே, மறுபுறம் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது ரஷ்யா. முக்கிய நகரங்களை எல்லாம் சுற்றிவளைத்துள்ள. உக்ரைன் சரணடைய வேண்டும் என்றே கருதுகிறது. அப்படி நடக்காத பட்சத்தில், உக்ரைனை அழிக்க வேண்டும் என்பது அதன் எண்ணமாக இருக்கிறது.

எனவே, முதல் கட்டமாக உக்ரைனை சரணடைய செய்வதற்காக பழைய கால போர் தந்திரத்தை அது பின்பற்றி வருகிறது. நகரத்தை சுற்றி இராணுவத்தை நிறுத்துவது, மக்களை வெளியேற விடாமல் தடுப்பது, அவர்களுக்கு உணவு, தண்ணீர் கிடைக்காமல் செய்வது, இரவில் குண்டுமழை பொழிந்து அவர்களை தூங்கவிடாமல் அச்சுறுத்துவது ஆகியவை இதில் அடங்கும்.

இதனால், மக்கள் படும் துன்பங்களை தாங்கமுடியாமல், ஜனாதிபதியை சரணடைய செய்வதே இதன் முக்கிய நோக்கம். பல்வேறு நகரங்களில் ரஷ்யா தற்போது இந்த முற்றுகை தந்திரத்தை பின்பற்றி வருகிறது.

**பொதுமக்களைக் கொல்வதாக ரஷ்ய வீரர்கள் மீது குற்றச்சாட்டு**

உக்ரைனில் பொதுமக்கள் வாகனங்கள் மீது ரஷ்ய வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தலைநகர் கீவ்வுக்கு அருகேயுள்ள மகரிவ் நகரில் பொதுமக்களைக் கொன்றதாக ரஷ்யா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த திங்களன்று இனிப்பகத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சில் 13 பேர் உயிரிழந்த நிலையில், ஆதரவற்றோர் நிலையத்திற்கு ஆசிரியர்களை ஏற்றிச்சென்ற பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதலில் 3 ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

# ஐ.பி.எல். தொடரா? தேசமா? சோதனையில் தள்ளாடும் தென்னாபிரிக்க வீரர்கள்!

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடவுள்ள தென்னாபிரிக்க அணியின் குழாம் அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த குழாமில் ஐ.பி.எல். தொடரில் விளையாடவுள்ள 08 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். அதில் அன்ரிச் நோர்கியா, மகாலா ஆகிய இருவரும் உபாதை காரணமாக இடம்பெறவில்லை.

பங்களாதேஷ் அணியுடனான ஒருநாள் தொடரானது, ஐ.பி.எல். ஆரம்பிக்க மூன்று நாட்களுக்கு முன்பு நிறைவுபெறுகிறது. இதனால் ஒருநாள் தொடரில் இடம்பெற்றுள்ள ககிஸோ ரபாடா, லுங்கி என்கிடி, வான் டர் டைசென், டேவிட் மில்லர், குயிண்டன் டி கொக், எய்டன் மார்க்ரம், டுவைன் பிரிடோரியஸ், மார்கோ ஜென்சென் ஆகிய 08 வீரர்களும் ஐ.பி.எல். தொடக்க ஆட்டங்களில் விளையாட மாட்டார்கள் எனத் தெரிகிறது.



ஐ.பி.எல். தொடரில் விளையாடும் அனைத்து வீரர்களும் மூன்று நாள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்பிறகுதான் கொரோனா தடுப்பு வளையத்துக்குள் அவர்களால் நுழைய முடியும். இதன் காரணமாக ஒருநாள் தொடரில் பங்கேற்கும் வீரர்களால் ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப ஆட்டங்களில் இடம்பெறுவது கடினம். மேலும், மார்ச் 31 முதல் ஏப்ரல் 12 வரை நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் என்ன நடக்கப் போகிறது என்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை.

ஐ.பி.எல். தொடரா, டெஸ்ட் தொடரா இரண்டில் எதைத் தேர்வு செய்வது என்பதை வீரர்களே முடிவு செய்துகொள்ளலாம் என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. வீரர்களின் முடிவைக் கொண்டு அவர்கள் எதற்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்று தெரிந்துவிடும் என தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவர் டீன் எல்கர் கூறியுள்ளார். ஒருநாள் தொடர் முடிந்த பிறகு டெஸ்ட்டில் விளையாடாத வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் கலந்துகொள்ளலாம் என தென்னாபிரிக்க கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் விக்டர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

எனினும் ரபாடா, என்கிடி, வான் டர் டைசென், மார்க்ரம், ஜென்சென், நோர்கியா ஆகிய 06 டெஸ்ட் வீரர்கள், டெஸ்ட் தொடரில் இடம்பெறுவார்களா அல்லது ஐ.பி.எல். தொடரை தேர்வு செய்வார்களா என்ற கேள்விக்கான விடை இதுவரை தெரியவில்லை.

# தங்க மங்கையின் தந்தையை கைது செய்த ரஷ்ய இராணுவம்



பீஜிங்கில் நடைபெறும் பராலிம்பிக்கில் உக்ரைன் வீராங்கனையான ஐரினா புய் தங்கம் வென்ற வேளையில் அவரது தந்தையை ரஷ்ய இராணுவம் கைது செய்துள்ளது. சர்வதேச பெண்கள் தினத்தன்று பெண்களின் சக்தியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியில், ஐரினா புய் தனது வாழ்நாள் கனவான பராலிம்பிக் தங்கத்தை அடைந்தார். நடுத்தர தூர பயத்லான் பந்தயத்தில் அணி வீரர்களான ஒலெக்ஸாண்ட்ரா கொனோனோவா, லியுட்மிலா ஆகியோர் அவருடன் இரண்டாம், மூன்றாம் இடம் பிடித்துமேடையைப் பகிர்ந்து கொண்டனர்.

நாங்கள் உக்ரைனுக்காகவும் உக்ரைனின் பெயரிலும் போராட இங்கு இருக்கிறோம் என்று 26 வயதான புய் செய்தியாளர்களிடம் கூறினார். லலெட்டினா ஓய்வில் இருப்பதாகவும், அணியின் மருத்துவரின் ஆதரவைப் பெறுவதாகவும் ஹராச் மேலும் கூறினார். கார்கிவில் உள்ள உக்ரைன் அணியின் பயிற்சியாளரின் வீடும் சமீபத்திய நாட்களில் குண்டுவெடிப்புக்குள்ளானதாக அவர் கூறினார். பராலிம்பிக்ஸில் உக்ரைனின் விளையாட்டு வீரர்கள் நிச்சயமற்ற தன்மை மற்றும் அழிவுகளை மீறி சிறப்பாகச் செயற்பட்டனர். தங்கள் தாய்நாட்டின் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து மனவேதனையுடன் போராடிய போதிலும், பீஜிங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை வரை உக்ரைன் அணி 06 தங்கம் மற்றும் 17 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ஸ்வெரவ்வுக்கு ஆத்திரத்தால் வந்த வினை





மெக்சிகோவில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற மெக்சிகன் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் இரட்டையர் பிரிவில் 24 வயதான ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரவ், பிரேசில் வீரர் மார்சிலோ மெலோ ஜோடி - பிரிட்டன் வீரர் லாயட் கிளாஸ்பூல், பின்லாந்து வீரர் ஹர்ரி ஹெலியோவாரா ஜோடியிடம் போராடி தோற்றது. நடுவரின் தீர்ப்புதான் தோல்விக்கு காரணம் என ஆத்திரமடைந்த ஸ்வெரவ் கோபத்துடன் திட்டியபடி, தனது டென்னிஸ் மட்டையை நடுவர் உட்கார்ந்திருந்த நாற்காலியில் அடித்து உடைத்தார்.

ஸ்வெரவின் செயல் சர்ச்சையான நிலையில் அவர் பின்னர் மன்னிப்பு கேட்டாலும், ஒற்றையர் பிரிவில் இருந்து போட்டி நிர்வாகம் அவரை நீக்கியது. விசாரணைக்கு பிறகு என்ன தண்டனை என்பது அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், அவரின் செயல் குறித்து டென்னிஸ் வீரர்கள் சங்கம் விசாரணை நடத்தியது. விசாரணை முடிவில், ஸ்வெரவ் 08 வார காலத்துக்கு டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தவறாக பேசியதற்கு 20 ஆயிரம் டொலர், நடத்தை விதிகளை மீறியதற்காக 20 ஆயிரம் டொலர், பரிசுத் தொகையில் இருந்து 31 ஆயிரம் டொலர் அபராதமாக விதிக்கப்பட்டது. மேலும் மெக்சிகன் ஓபன் போட்டியில் கிடைத்த தரவரிசை புள்ளிகளையும் விதிமீறலால் இழந்துள்ளார்.

# மெக்ஸ்வெல் இல்லை! ஆர்.சி.பி. அணியின் புதிய தலைவராக டு பிளஸிஸ்

## நாளை மறுதினம் உத்தியோகபூர்வ அறிவிப்பு



15ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில் தொடரில் பங்கேற்கும் அனைத்து அணிகளும் தங்களது அணித்தலைவர்களை அறிவித்து விட்டன. ஆனால், ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் (ஆர்.சி.பி.) அணியின் தலைமை மாத்திரம் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

ஆர்.சி.பி. அணிக்கு கடந்த சில தொடர்களில் விராட் கோஹ்லி அணித்தலைவராக செயற்பட்டுவந்தார். கடந்த வருடம் நடைபெற்ற தொடருடன் அவர் அணியின் தலைமை பொறுப்பில் இருந்து விலகுவதாக அறிவித்தார். அணியில் ஒரு வீரராக அவர் தொடர்கிறார். இதுவரையில் பெங்களூர் அணியின் புதிய தலைவர் யார் என்பது அறிவிக்கப்படவில்லை. அணி நிர்வாகம்தான் இன்னும் யார் என்பதை அறிவிக்காமல் உள்ளது.

இந்நிலையில், அணியின் புதிய தலைவர் யார் என்பது தொடர்பிலான அறிவிப்பு நாளை மறுதினம் மாலை அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்போது அணியின் புதிய ஜெர்சியும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவரான ஃபாஃப் டு பிளஸிஸ், ஆர்.சி.பி. அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

அணியில் இடம்பெற்றுள்ள ஆஸி. அணியின் சகலதுறை வீரர் கிளேன் மெக்ஸ்வெல்லுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர் திருமணம் காரணமாக சில ஆட்டங்களை தவறவிடுவதால் அணி நிர்வாகம், ஃபாஃப் டு பிளஸிஸ்ஸை தேர்ந்தெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆர்.சி.பி. அணி தங்களது முதல் ஆட்டத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் மோதுகிறது.

# உக்ரைன் குழந்தைகளுக்காக உதவ முன்வந்த டென்னிஸ் வீரர் முர்ரே



உக்ரைன் மீதான ரஷ்யாவின் மோதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதாக உலகின் முன்னாள் முதல்நிலை டென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே தெரிவித்துள்ளார்.

ஐ.நா. அகதிகள் நிறுவனமானது நேற்று முன்தினம் அதன் பிரத்தியேக இணையதளத்தில் 20 இலட்சம் பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர் என கூறியது, அவர்களில் நூறாயிரக்கணக்கானோர் இளைஞர்கள் என்று ஐ.நா. நம்புகிறது. இந்நிலையில் டென்னிஸ் வீரரான ஆண்டி முர்ரே, இந்த ஆண்டு முழுவதும் தான் பங்கேற்கும் போட்டிகளின் பரிசுத் தொகையிலிருந்து தனது வருமானத்தை நன்கொடையாக வழங்கப்போவதாக தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், உக்ரைனில் அதிகரித்துவரும் மோதலால் 7.5 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் ஆபத்தில் உள்ளன. எனவே அவசர மருத்துவப் பொருட்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கான கருவிகளை வழங்குவதற்கு யுனிசெப் உடன் இணைந்து பணியாற்றுகிறேன். மேலும் இந்த ஆண்டு முழுவதும் எனது பரிசுத் தொகையிலிருந்து எனது வருமானத்தை நன்கொடையாக வழங்கப் போகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# டயலொக் பாடசாலை ரக்பி – 7 இரண்டாம் கட்டப் போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பம்

இலங்கை பாடசாலைகள் ரக்பி சம்மேளனம் மற்றும் டயலொக் ஆசியாட்டா நிறுவனம் ஆகியன இணைந்து நடத்துகின்ற 14 வயதுக்குட்பட்டோருக்கான டயலொக் பாடசாலை ரக்பி – 7 சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்டப் போட்டிகள் நாளை மறுதினம் கண்டி பல்லேகலே டிரினிட்டி கல்லூரி ரக்பி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

வடமேல் மாகாணத்தின் சார்பான தமது பங்கேற்பை அதுகல்புர குமார தே.பா, அஸ்வெத்தும வித்தி., ஸ்ரீசரணங்கர சங்கராஜ ம.வி., பாதுகாப்பு சேவைகள் பாடசாலை, ஸ்ரீநிஷங்க ம.வி., பண்டாரநாயக்க வித்தி., போயகனே ம.வி., சாஹிரா மொடல் ம.வி. மற்றும் வயம்ப சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கர ம.வி. ஆகிய பாடசாலைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மத்திய மாகாணத்தின் சார்பான தமது பங்கேற்பை நாவலப்பிட்டி மத்திய கல்லூரி, ரங்கிரி தம்புள்ளு தே.பா, ஹெந்தகனாவ ம.வி., கலேவெல மத்திய கல்லூரி, அல்-மதீனா தே.பா, குருதுவத்த ரோயல் கல்லூரி, காமினி தே.பா, மற்றும் ஹேவாஹெட்ட ம.ம.வி ஆகிய பாடசாலைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மேலும், ஊவா மாகாணத்தின் சார்பான தமது பங்கேற்பை தம்பரவ ம.வி., கெந்தகொல்ல இரண்டாம் நிலைப் பாடசாலை, கிராந்துருகோட்டே ம.ம.வி., பண்டாரநாயக்க ம.ம.வி., ஹத்தத்தாவ தே.பா, அந்தஉல்பாத தே.பா. மற்றும் குட்டியகொல்ல ம.வி ஆகிய பாடசாலைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறித்த தொடரின் முதற்கட்ட போட்டியில், இரத்தினபுரி - கொடக்கவெல, குலரத்ன மத்திய கல்லூரி, கேகாலை ஸ்வர்ண ஜயந்தி மகா வித்தியாலயத்தை அதிக புள்ளிகளுடன் தோற்கடித்து சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.




Dialog
SCHOOLS RUGBY DEVELOPMENT SEVENS

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7